ஆகட்டும்

விலை ரூ.25

மரியன் ஊழியர் மரியயல் பாத இதழ்



மலர் - 04 இதழ் - 12 அக்டோபர் - 2026

பதிப்பாசிரியர் பக்கம்

அருட்பணி சாமி ம.ஊ.ச



திருச்செபமாலையின் அன்னை

திருவிழா, வரலாறு, மறைநூல் கோட்பாடுகள் மற்றும் ஆன்மீகம்

கத்தோலிக்க திருஅவையின் ஆன்மீக வாழ்வில் அன்னை மரியாவுக்கு அளிக்கப்பட்டுள்ள மிக உயரிய வழிபாட்டுத் தலைப்புகளில் "திருச்செபமாலையின் அன்னை" (Our Lady of the Holy Rosary) என்பது முதன்மையான ஒன்றாகும். செபமாலை என்பது வெறும் மக்கள் பக்திக்கான பிரார்த்தனை முறை மட்டுமல்ல அது விவிலியத்தின் ஆழமான மறை உண்மைகளையும், நமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவை மையமாகக் கொண்ட அருளடையாள சாதன (sacramental sign) வழிகாட்டியாகும்.

திருச்செபமாலையின் அன்னையின் திருவிழா ஒவ்வொரு ஆண்டும் அக்டோபர் 7-ஆம் நாள் கத்தோலிக்க திருஅவையால் கொண்டாடப்படுகிறது.

16-ஆம் நூற்றாண்டில் ஒட்டோமான் துருக்கியர்களின் படைகள் ஐரோப்பிய கத்தோலிக்க நாடுகளின் மீது படையெடுத்து வந்தபோது, கிறிஸ்தவர்களின் நம்பிக்கையும் கலாச்சாரமும் பெரும் அச்சுறுத்தலுக்கு உள்ளானது. 1571-ஆம் ஆண்டு அக்டோபர் 7-ஆம் நாள் கிரேக்கக் கடற்பகுதியில் நடைபெற்ற வரலாற்று புகழ்மிக்க "லெப்பாண்டோ

உள்ளே

பதிப்பாசிரியர் பக்கம்	-	1-3
மரியாவின் ஆன்மிகம்	-	4-6
அன்னையின் திருத்தலம் நோக்கி	-	7-10
திருத்தலம் நோக்கி திரஸ்தேவேரே அன்னையின் திருத்தலம்	-	11-14
விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி	-	15-17
திருஅவையின் வரலாற்றில் அன்னை மரியாவின் காட்சிகள்	-	18-20
கவிதைப் பக்கம்	-	21
ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்	-	23-31
விவிலிய வினாடி வினா	-	32

கடற்போரின்" (Battle of Lepanto) போது, போப் புனித ஐந்தாம் பயஸ், ஐரோப்பாவின் அனைத்து கத்தோலிக்க விசுவாசிகளையும் அன்னை மரியாவின் பரிந்துரையை வேண்டித் தொடர் ஜெபமாலை செபிக்குமாறு கேட்டுக்கொண்டார். போரில் மிகக் குறைந்த படைகளுடன் கத்தோலிக்கப் படைகள் மாபெரும் வெற்றிபெற்றன. இந்த வெற்றி அன்னையின் சக்திவாய்ந்த பரிந்துரையாலும், ஜெபமாலையின் வல்லமையாலும் கிடைத்தது என்பதை உணர்ந்த திருத்தந்தை ஐந்தாம் பயஸ், இந்த நாளை "வெற்றியின் அன்னை விழா" என்று அறிவித்தார். 1573-இல் திருத்தந்தை பதிமூன்றாம் கிரகோரி (Pope Gregory XIII) இவ்விழாவின் பெயரை "திருச்செபமாலையின் அன்னை விழா" என மாற்றினார். பிற்காலத்தில் திருத்தந்தை பத்தாம் பக்திநாதர் இந்நாளை அக்டோபர் 7-ஆம் தேதிக்கு நிலையாக மாற்றினார் இதன் பின்னணியிலேதான் அக்டோபர் மாதம் முழுவதும் "செபமாலையின் மாதம்" ஆகக் கொண்டாடப்பட்டு வந்தது.

செபமாலை ஒரே நாளில் உருவான பக்தி முயற்சி அல்ல அது பல நூற்றாண்டுகளாக இறைத்தூண்டுதலால் உருவான ஒரு செபமாகும். திருஅவையின் தொடக்ககாலதுறவிகள் தாவீதின் 150 திருப்பாடல்களைப் (Psalms) தினமும் செபிக்கும் வழக்கத்தைக் கொண்டிருந்தனர். பாமர மக்கள் இந்த 150 சங்கீதங்களை மனப்பாடம் செய்யஇயலாததால், அவற்றிர்க்குப் பதிலாக 150 "விண்ணகத்தில் இருக்கின்ற எங்ங்கள் தந்தையே" அல்லது "அருள் நிறைந்த மரியே" என்ற செபங்களை மணிகளைப் பயன்படுத்தி செபிக்கும் பழக்கம் தொடங்கியது.

13-ஆம் நூற்றாண்டில் பிரான்ஸ் நாட்டில் "ஆல்பிஜென்சிய தப்பறைக்கொள்கை" (Albigensian heresy) பரவியபோது, திருஅவையின் நம்பிக்கையைக் காக்க புனித தோமினிக் (St. Dominic) தீவிரமாகப் போராடிவந்தார். அன்னை மரியா புனித தோமினிக்கிற்குத் தோன்றி, தப்பறைக்கொள்கைகளை முறியடிக்கவும் மனமாற்றத்தை உருவாக்கவும் "செபமாலை" எனும் ஆயுதத்தை அவருக்குக் வழங்கி பரப்பச் சொன்னார். போர்த்துக்கல் நாட்டின் பாத்திமா நகரில் மூன்று இடையர் சிறுவர்களுக்குக் காட்சி அளித்த அன்னை மரியா, "நாமே திருச்செபமாலையின் அன்னை" என்று தன்மையே வெளிப்படுத்தியதோடு, உலக அமைதிக்காகத் தினமும் செபமாலை செபிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இவ்வாறு செபமாலை என்பது மரியாவை முதன்மைப்படுத்தும் ஜெபம் என்ற தவறான புரிதல் சிலரிடம் உண்டு. ஆனால், அதன் இறையியல் பின்னணியை ஆராய்ந்து பார்த்தால், அது முற்றிலும் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவையே மையமாகக் கொண்ட (Christocentric prayer) விவிலிய ஜெபம் என்பது தெளிவாகிறது. விவிலியச் சுருக்கம் செபமாலையின் முக்கிய செபங்களான பரலோகத்தில் இருக்கிற (மத். 6:9-13) மற்றும் அருள் நிறைந்த மரியே (லூக். 1:28, 1:42) ஆகிய இரண்டும் நற்செய்தியிலிருந்து நேரடியாக எடுக்கப்பட்டதாகும். அன்னை மரியாவின் பரிந்துரை கானாவூர்த் திருமணத்தில்



அன்னை மரியா இயேசுவிடம் பரிந்துரைத்தது போல (யோவா. 2:1-11), நம்பிக்கையாளர்களின் தேவைகளை இறைவனிடம் கொண்டு சேர்க்கும் பரிந்துரையாளராகச் செயல்படுகிறார். ஆண்டவரின் மீட்புத் திட்டத்தில் ஆண்டவர் இயேசு மனிதரான நிகழ்வு முதல், அவரது சிலுவைச் சாவு, உயிர்ப்பு வரை அனைத்திலும் மரியாவின் "ஆகட்டும்" (FIAT) (லூக் 1:38) முக்கியத்துவம் பெறுகின்றது.

திருச்செபமாலையில் நாம் தியானிக்கும் 20 மறையுண்மைகளுமே நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் மீட்புத் திட்ட வாழ்க்கையை வெளிப்படுத்தும் உண்மைகளாகும். இயேசுவின் பிறப்பு மற்றும் குழந்தைப்பருவ நிகழ்வுகளை மகிழ்ச்சி மறையுண்மையிலும், போப் புனித இரண்டாம் ஜான்பால் அறிமுகப்படுத்திய ஒளியின் மறையுண்மையில் அவரின் திருமுழுக்கையும் பணிவாழ்வையும், நற்கருணை ஏற்படுத்தியதையும், அவரின் சிலுவைப்பாடுகளையும் இறப்பையும் துயர மறையுண்மையிலும், அவரின் உயிர்ப்பு, விண்ணேற்பு, தூய ஆவியாரின் வருகை மற்றும் அன்னை மரியாவின் விண்ணகத்தக்கு எடுத்துக்கொள்ளப்பட்டதையும் மகிமை மறையுண்மையிலும் தியானிக்கின்றோம்.

போப் புனித இரண்டாம் ஜான் பால் (Pope John Paul II) *தனது* Rosarium Virginis Mariae *என்ற திருமடலில் "ஜெபமாலை செபிப்பது என்பது மரியாவோடு சேர்ந்து கிறிஸ்துவின் திருமுகத்தைக் காண்பதாகும்" எனக் குறிப்பிடுகின்றார். "மரியாவோடு இயேசுவைக் காண்பதே திருச்செபமாலையின் ஆன்மீக மையப்பொருள்." உதடுகள் செபத்தை உச்சரித்தாலும், மனம் இயேசுவின் வாழ்வின் மறைபொருட்களைத் தியானிக்கிறது. இது ஒருவரை ஆழ்நிலைத் தியான நிலைக்கு அழைத்துச் செல்லும் ஆன்மீகப்பயிற்சியாகும். "ஒன்றாக ஜெபிக்கும் குடும்பம் என்றும் நிலைத்து வாழும்" என்ற கூற்றிற்கேற்ப, குடும்பங்களில் செபமாலை செபிப்பது குடும்ப உறவுகளையும் அமைதியையும் பலப்படுத்துகிறது. அனைத்துதரப்பு மக்களும் எளிதாகச் செபிக்கக்கூடிய செபம் இது. இது மனிதரின் ஆன்மீகச் செருக்கைக் குறைத்து, குழந்தையைப் போன்ற இறைநம்பிக்கையை நம்மில் வளர்க்கிறது. தனிமனித அமைதி, குடும்பப் பேறு மற்றும் உலக அமைதிக்கான வலிமைமிக்க ஆயுதமாக அன்னை மரியா மனுக்குலத்திற்கு தந்த ஆன்மீகக் கொடை செபமாலையாகும். திருச்செபமாலையில் நம்பிக்கையாளர் அனைவரையும் அன்னை மரியா தனது மகனாகிய இயேசு கிறிஸ்துவை நோக்கி அழைத்துச் செல்லும் ஆன்மீக வழிகாட்டியாகத் திகழ்கிறார். செபமாலையைத் தினமும் செபிப்பதன் வழியாக நாம் கிறிஸ்துவோடு நெருங்கிய உறவு கொண்டு, அன்னையின் தாயுள்ளம் கொண்ட அரவணைப்பையும், இறைவனின் அளப்பரிய அருளையும் பெற்று வாழ முடியும் என்ற நம்பிக்கை நம்மில் வளர்கின்றது. .*

செபிப்போம் செபமாலையை **வெற்றிபெறுவோம் நமது வாழ்வில்**



அன்னை மரியாவின் ஆன்மீக சீடத்துவம்

அருட்பணி. குழந்தைசாமி ம.ஊ.ச
மறைமாநில அதிபர்

அன்னை மரியாவின் சீடத்துவ ஆன்மீகம் அனைத்து நம்பிக்கையாளர்களுக்கும் ஊக்கத்தை வழங்கும் உன்னதமான சாட்சியம் என்றால் மிகை ஆகாது. ஆண்டுதோறும் அக்டோபர் திங்கள் ஏழாம் நாள் ஜெபமாலை அன்னைக்கு விழா கொண்டாடுகின்றோம். தொடக்கத்தில் இருந்தே திருஅவையின் வரலாற்றில் அன்னை மரியாளுக்கு பல்வேறு பக்தி முயற்சிகளை நிறைவேற்றி, வணக்கம் செலுத்தி, அன்னையின் வழியில் கிறிஸ்துவ ஆன்மீகம் வளரவும், ஒளிர்ந்திடவும், எத்தனையோ புனிதர்கள் நமக்கு வழிகாட்டியாக இருந்திருக்கிறார்கள். இருப்பினும் இந்த ஜெபமாலை ஜெபிக்கும் வழக்கம் திருஅவையின் வரலாற்றில் ஒரு முக்கிய பங்கை வகிக்கின்றது. ஜெபமாலையின் தனித்தன்மை எதில் மையம் காண்கிறதெனில் கடவுள் தமது மீட்பின் திட்டத்தை நிறைவேற்ற, தம் ஒரே அன்பு திருமகனை இவ்வுலகிற்கு அனுப்பினார். தமது அன்பையும், இரக்கத்தையும், மீட்பையும் ஒவ்வொரு சகோதர சகோதரிகளும் உணர்ந்து வாழவும் இறையரசின் கருவிகளாக இம்மண்ணிலே திகழவும் கடவுள் விருப்பம் கொண்டார். ஆகவே ஜெபமாலை ஜெபிப்பதின் உயரிய நோக்கம் யாதெனில் அன்னையின் வழியில் நீங்களும் நானும் கடவுளின் திட்டம் என்ன என்பதை அறிந்து, அவரது அருளின் துணையால் இயேசுவின் வழியில், இணையற்ற விதத்தில் நாம் அனைவரும் கிறிஸ்துவின் மீட்பை ஒளிரச் செய்திட, அவ்வொளியில் அக்களித்து அறிவித்திட அழைக்கப்படுகின்றோம். மகிழ்ச்சி, ஒளி, துயர, மற்றும் மகிமை மறை உண்மைகள் அனைத்தும் விவிலியத்தை மையமாக கொண்டவை. ஆக ஒவ்வொரு மறை பொருளையும் தியானிக்கின்ற பொழுது அந்த மறைபொருள் வழியாக கடவுள் திரு அவைக்கும் மனிதகுலம் முழுவதற்கும் அளப்பரிய ஆற்றிய அனைத்து வல்ல செயல்களையும் நாம் உணர்ந்து கடவுளை போற்றுவதோடு, இன்றும் நம் வழியாக கடவுள் போற்றப்பட வேண்டும் அவரது மீட்பை மக்கள் கண்டு கொள்ள வேண்டும் என்ற உயரிய நோக்கம் வடிவம் பெறற்றிடவே மறைவுண்மைகளின் மகத்துவம் நம்மில் மிளிர்ந்திட அன்னை மரியாள் அழைப்பு விடுக்கிறார்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து

"உடல்நிலை சரியில்லாமல் பல மருத்துவமனைகளில் பரிசோதித்தும் காரணம் தெரியவில்லை மாதாவிடம் வேண்டிக்கொண்டேன் பலன் கிடைத்தது.

சாட்சி

மாதாவுக்கு நன்றி என் பெயர் ஜெனிப்பர். நான் இதே பங்கில் தான் வருகிறேன். கடந்த மாதம் எனக்கு உடல்நிலை மிகவும் மோசமாகிவிட்டது. மூச்சு விடுவதற்குக்கூட மிகவும் சிரமமாக இருந்தது. பல மருத்துவமனைகளுக்குச் சென்று பல பரிசோதனைகள் செய்தும், எந்தப் பிரச்சனையும் இல்லை என்று மருத்துவர்கள் தெரிவித்தனர். ஆனால் எனக்கு உடல்நிலையில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. அதனால் ஒரு நாள் இங்கு யாரும் இல்லாத நேரத்தில் கோயிலுக்கு வந்து, மாதாவிடமும் குழந்தை இயேசுவிடமும் மனதார வேண்டிக்கொண்டேன். "எனக்கு நீங்கள்தான் சுகம் தர வேண்டும் நான் உங்களை மட்டும்தான் நம்பி இருக்கிறேன்" என்று சொல்லி ஜெபித்துவிட்டு சென்றேன். அதன்பிறகு இப்போது நான் நல்ல உடல்நலத்துடன் இருக்கிறேன். எனக்கு நிம்மதியையும் நலத்தையும் அளித்த மாதாவுக்கு நன்றி. இயேசப்பாவுக்கு நன்றி

திரு அவையில் நாம் மேற்கொள்ளும் ஒவ்வொரு பக்தி முயற்சியையும் நம் ஆண்டவர் இயேசு கிறிஸ்துவில் கொண்டுள்ள நம்பிக்கையின் வெளிப்பாடாக அமைய வேண்டும். ஏனெனில் நம்பிக்கையின் வழியாக கிறிஸ்து உங்கள் உள்ளங்களில் குடி கொள்வாராக. அன்பே உங்கள் வாழ்வுக்கு ஆணிவேரும் அடித்தளமுமாய் அமைவதாக. மேலும் இறைமக்கள் அனைவரோடும் சேர்ந்து கிறிஸ்து உடைய அன்பின் அகலம், நீளம், உயரம், ஆழம் என்னவென்று உணர்ந்து, அறிவுக்கு எட்டாத இந்த அன்பை அறிந்து கொள்ளும் ஆற்றல் பெறுவீர்கள் ஆக அதன் மூலம் கடவுளின் முழு நிறைவையும் நீங்கள் பெற்றுக் கொள்வீர்களாக் என்று புனித பவுல் பதிவு செய்கின்றார்(எபேசி. 3, 17-19). மேலும் ஒரு காலத்தில் இருளாய் இருந்த நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள் ஆக ஜெபமாலை ஜெபிக்கின்ற பொழுது நம்பிக்கையின் வழியாக அன்னையை உற்று நோக்கி கற்கின்ற பொழுது நாம் ஒவ்வொருவரும் எத்தகைய பழைய நிலையில் இருந்து அழைக்கப்பட்டு, ஆசீர்வதிக்கப்பட்டு, தூய வாழ்வு வாழ பணிக்கப்படுகின்றோம் என்பதை நாம் ஒவ்வொருவரும் நமது மனதில் ஆழமாக இடம்பெற செய்திட வேண்டும். ஒரு காலத்தில்

இருளாய் இருந்து நீங்கள் இப்போது ஆண்டவரோடு இணைந்து ஒளியாய் இருக்கிறீர்கள். ஆகவே ஒளியின் மக்களாக வாழுங்கள். ஏனெனில் ஒளியே எல்லா நன்மையையும் நீதியையும் உண்மையையும் விளைவிக்கிறது. ஆண்டவருக்கு உகந்தது எது என்பதை ஆராய்ந்து பாருங்கள். அன்னையின் வழியில் ஆம் என்று சொல்லி ஆண்டவரோடு இணைந்து கடவுளின் வாக்குறுதிகள் நம்மில் நிறைவேற்றிட இணைந்து மன்றாடுவோம் இணைந்து செயல்படுவோம் இறைவனின் பிரசன்னத்தை நம்மிடையே இடம்பெறச் செய்வோம்

அன்னை மரியாவின் வழியில் நமது வாழ்வின் நிகழ்வுகளை அனுகி, ஒளியில் மகிழ்ச்சியையும் துயரத்தில் மகிமையையும் காண்போம். தொடர்ந்து ஒருவர் மற்றவருக்காக ஜெபிப்போம். "தூங்குகிறவனே, விழித்தெழு இறந்ததோரிடமிருந்து உயிர்பெற்றெழு கிறிஸ்து உன் மீது ஒளிர்ந்தெழுவார் (எபேசி. 5, 14). அன்னை மரியாவின் பள்ளியில் அனைத்தையும் கற்போம் கடைபிடிப்போம் நமது வாழ்வால் பிறருக்கு கற்பித்து இறை அரசை மண்ணில் மலரைச் செய்வோம்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து

"பெரிய விபத்தில் சிக்கிய என் மகனுக்கு எந்தப் பாதிப்பும் ஏற்படாமல் இயேசப்பா காத்தருளினார்."

சாட்சி

இயேசப்பாவுக்கு நன்றி என் பெயர் ஜானகி. நான் இந்த சபைக்கு எட்டு ஆண்டுகளுக்கும் மேலாக வந்து கொண்டிருக்கிறேன். என் மகன் விக்கி, ஜே.பி. கல்லூரியில் மூன்றாம் ஆண்டு படித்து வருகிறார். கடந்த பிப்ரவரி மாதம் அவருக்கு ஒரு பெரிய விபத்து ஏற்பட்டது. விபத்தைப் பார்த்த அனைவரும், "இவ்வளவு பெரிய விபத்தா?" என்று சொல்லும் அளவுக்கு அது இருந்தது. என் மகனுக்கு ஏதாவது பெரிய பாதிப்பு ஏற்பட்டுவிடுமோ என்று மிகவும் பயந்தேன். அவனை ஸ்கேன் செய்வதற்காக அழைத்துச் சென்றபோது, ஸ்கேன் அறையின் வாசலில் நின்று, "இயேசப்பா, என் பையனுக்கு எந்தப் பிரச்சனையும் வந்துவிடக்கூடாது" என்று கண்ணீருடன் மனதார வேண்டிக்கொண்டேன்அவனுக்கு கண்ணிலும் தையல் போடும் அளவுக்கு காயம் ஏற்பட்டிருந்ததால், மிகவும் பயமாக இருந்தது. ஆனால் இயேசப்பாவை நம்பி தொடர்ந்து ஜெபித்தேன். ஸ்கேன் முடிவு வந்தபோது எந்தப் பிரச்சனையும் இல்லை, நார்மலாக இருக்கிறது என்று மருத்துவர்கள் தெரிவித்தார்கள். இயேசப்பாவுக்கு மிக்க நன்றி

அன்னை மரியாவின் திருப்பயணங்கள

அருள்சகோதரி **டெக்லாமோரி** ம.ஊ.ச
செர்வைட் தலைமையகம், சென்னை.

பயணம் பதினான்கு

தொடக்கவுரை

பல வகையான நோக்கங்களுடன் மக்கள் பயணங்களை, தங்கள் சொந்த குடும்பங்கள், மாணவர்கள், ஆசிரியர் குழாம், துறவியர் குழுமங்களாக மேற்கொள்கின்றனர். கிறிஸ்தவர்களாகிய நாம் திருப்பயணிகள். நாம் திருத்தலங்களை நாடிச் செல்கிறோம். பல வகையான எதிர்பார்ப்புக்கள், அவற்றை அடைய முன் தயாரிப்பு வேண்டுதல்கள், ஒறுத்தல்கள், தவ முயற்சிகள், நடைப் பயணங்கள், இன்னும் பல. இறைவன் இவற்றை விரும்புகின்றாரா? அன்னை மரியா இவைகளைக் கேட்கின்றாரா? இல்லை. இவைகள் நமது மன சாந்திக்காகவே. நமது தேடல்கள் பல வகையாக இருந்தாலும் இறைவன் நம்மிடம் எதிர்பார்ப்பது மனமாற்றமே. நீதியும் அமைதியும் நிறைந்த ஒரு குடும்பம், சமுதாயம் வளர வேண்டுமென்பதே ஆகும். இதை நாம் இறைவாக்கினர் ஆமோஸ் நூலில் வாசிக்கின்றோம். "என் முன்னிலையில் நீங்கள் இரைச்சலிட்டுப் பாடும் பாடல்களை நிறுத்துங்கள். உங்களின் வீணைகளின் ஓசையை நான் கேட்க மாட்டேன். மாறாக, நீதி வெள்ளமெனப் பொங்கி வருக் நேர்மை வற்றாத ஆறாகப் பாய்ந்து வருக் (5:23-24). நமது அன்னை மரியா மேற்கொண்ட பயணங்களின் இலக்கும் குறிக்கோளும் மிகத் தெளிவாக இருந்தன. கடந்த இதழ்களின் மூலம் இதை சிந்தித்து வருகின்றோம். இந்த மாதம் அவரின் பதினான்காவது பயணத்தில் விண்ணகம் சென்ற இயேசுவின் அனுபவத்தைப் பெற்றபின் தூய ஆவியாரின் அனைத்துக் கொடைகளையும் கனிகளையும் நிறைவாகப் பெற திருத்தூதர்களை அழைத்துச் செல்வதையும் எருசலேமில் நிகழும் மாபெரும் இறைச் செயல்களையும் காண்போம்.

மரியாவின் எருசலேம் பயணம்

இயேசுவின் பாடுகள், மரணத்தின் போது இயேசுவின் சீடர்கள் சிதறுண்டு போயினர். ஆனால் அவரின் பெண் சீடர்கள் துணியுடன் செயல்பட்டனர். மரியா அவர்களுக்குத் துணிவை ஊட்டியிருப்பார் என்பதில் சந்தேகமில்லை. தன் அன்பு மகனின் இவ்வுலகப் பயணத்தின் இறுதி நாட்களில் அவர் ஆற்றிய உரைகளை உற்றுத் தியானித்து வந்தார். இயேசுவின் உயிர்ப்பு, விண்ணேற்றம், தூய ஆவியாரின் வருகை, புதிய இஸ்ரயேலின் தோற்றம் அல்லது தொடக்கக் காலத் திருஅவையில் இறையாட்சி வாழ்வு அனைத்தும் அவர்முன் தெளிவாக நிழலாடிய வண்ணம் இருந்தன. இவற்றை அடைய

அமைதியிலும், இறைவேண்டலிலும் ஈடுபட்டிருந்தார். இயேசு விண்ணேற்றம் அடையுமுன் அவர் உரைத்த வார்த்தைகளின் அடிப்படையில் திருத்தூதர்கள் ஆற்ற வேண்டிய பணிகளின் தீவிரத்தைத் தூண்டிக் கொண்டேயிருந்தார். "தூய ஆவி உங்களிடம் வரும்போது நீங்கள் கடவுளது வல்லமையைப் பெற்று எருசலேமிலும், யூதேயா, சமாரியா முழுவதிலும், உலகின் கடையெல்லை வரைக்கும் எனக்கு சாட்சிகளாய் இருப்பீர்கள்" என்ற இயேசுவின் பொன்மொழிகளின் ஆழ்ந்த பொருளைத் தியானித்தார். இறையாட்சி பற்றிய போதனைப் பணி, அதை எதிர்ப்பவர்களால் வரக்கூடிய வேதசாட்சிக்குரிய வாழ்வு அனைத்தையும் தன் உள்ளத்தில் உய்த்துணர்ந்தார். தன் மகன் விண்ணகம் சென்ற பின்னும் வானத்தையே அண்ணார்ந்து பார்த்துக் கொண்டிருந்த திருத்தூதர்களை எருசலேம் நோக்கிப் புதுத்தெம்புடன் அழைத்துச் சென்றார்.

ஒலிவ மலையிலிருந்து எருசலேம் ஏறத்தாழ ஒரு கிலோமீட்டர் தொலைவில் உள்ளது என நாம் அறிகிறோம். சிறிது தூரமே இருந்தாலும் மரியாவின் எண்ணங்கள் இயேசுவின் எருசலேம் பயணம் நோக்கிச் சென்றது. இயேசு பாடுகள் படவே அங்கு சென்றார். ஆண்டுதோறும் பாஸ்கா விழாவைக் கொண்டாட திருக்குடும்பம் அங்கு சென்றது. அது ஒரு மகிழ்வான திருப்பயணம். திருப்பாடல்களைப் பாடிக் கொண்டு ஆண்டவர் உறையும் இல்லம் நோக்கி, சீயோன் மலை நோக்கிச் செல்லும் பயணம் யூதர்களின் வாழ்வில் மறக்க முடியாத அனுபவம். இயேசுவுக்கு பன்னிரெண்டு வயது நடக்கும் போது எருசலேம் பாஸ்கா விழாவில் பங்கேற்றபின், காணாமற்போய் மூன்று நாள்கள் தேடியது மரியாவின் மனதில் தோன்றுகிறது. எருசலேம் பற்றி தன் மகன் உரைத்த இறைவாக்கு அவர் உள்ளத்தில் ஊடுருவியது. கோழி தன் குஞ்சுகளை தன் இறக்கைக்குள் கூட்டிச் சேர்ப்பது போல் நானும் உன் மக்களை அரவணைத்துக் கொள்ள எத்தனையோ முறை விரும்பினேன் (மத்தேயு 23:37) என்பதை நினைவு கூர்கின்றார். எருசலேம் கோவில் எதிரிகளால் தகர்க்கப்படும் என்றும், தானே அந்தக் கோவில் என்றும் உரைத்த வார்த்தைகளை தம் இதயத்தில் சுமந்தவராய் தூதுரைக்கும் பணியில் திருத்தூதர்களை மீண்டும் ஈடுபடுத்த வேண்டும் என்ற முனைப்புடன் எருசலேம் நோக்கிப் புதுத்தெம்புடன் பயணிக்கின்றார்.

இறைவேண்டலில் இணைந்த, இணைத்த, மரியா

திருத்தூதர் பணிகள் நூலில் தூய லூக்கா இதை மிக அழகாக எடுத்துரைக்கிறார். யூதாஸ் இஸ்காரியோத்தைத் தவிர அனைத்து திருத்தூதர்களும் ஒலிவ மலையில் இயேசுவின் விண்ணேற்பு நிகழ்வுக்குப் பின் எருசலேமில் ஏற்கனவே தாங்கள் தங்கியிருந்த மேல் மாடிக்குச் சென்றார்கள். அவர்கள் அனைவரும் சில பெண்களோடும் இயேசுவின் சகோதரர்களோடும், அவருடைய தாய் மரியாவோடும் இணைந்து ஒரே மனத்தோடு இறைவனிடம் வேண்டிக் கொண்டிருந்தார்கள் (1:14). ஏறக்குறைய 10 நாள்கள் செபித்திருக்க வேண்டும். ஏனெனில் தூய ஆவியார் இறங்கி வந்த பெந்தக்கோஸ்து எனும் பெருவிழா பாஸ்கா திருவிழாவிற்குப் பின் ஐம்பதாவது நாள் கொண்டாடப்பட்டது. ஆனால் இவ்விழாவிற்கு முன்பே யூதாசுக்குப்



பதிலாக மத்தியாவைத் தேர்ந்தெடுக்குமுன் புனித பேதுரு ஆற்றிய உரை அவர் ஆவியாரால் நிறைந்திருந்ததை எண்பிக்கிறது. இஸ்ரயேலின் பன்னிரு குலங்களையும் குறிக்கும் வண்ணம் பன்னிரு திருத்தூதர்கள் தொடர்ந்து இயேசுவின் இறையாட்சிப் பணிகளை ஆற்றுவதில் மரியாவும் தனது பங்கை அளித்திருக்க வேண்டும். முதல் கூட்டியக்கத் திருஅவையை ஒன்று கூட்டிய மரியா தூய ஆவியாரின் வருகைக்கும் சான்று பகர்ந்தார். பெந்தக்கோஸ்து எனும் நாள் வந்தபோது தூய ஆவி பெரும் இரைச்சலோடு வானத்திலிருந்து இறங்கி வர நெருப்பு போன்ற பிளவுற்ற நாவுகள் ஒவ்வொருவர் மீதும் வந்து அமர்ந்ததை அவர்கள் கண்டார்கள். அவர்கள் அனைவரும் தூய ஆவியால் ஆட்கொள்ளப்பட்டனர். தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் வெவ்வேறான மொழிகளில் பேசத் தொடங்கினர். நாசரேத்தில் கிறிஸ்து பிறப்பின் செய்தி அறிவிக்கப்பட்ட போது மரியா தூய ஆவியாரின் நிழலால் ஆட்கொள்ளப்பட்டார். இப்போது முழுமையாக ஆவியாரால் நிறைக்ப்பட்டு பன்னிரு திருத்தூதர்கள் மத்தியில் புதிதாய்ப் பிறந்த திருஅவையின் தலைவியாய் வீற்றிருக்கின்றார்.

பெந்தக்கோஸ்துப் பெருவிழாவின் போது தூய பேதுரு ஆற்றிய அருளுரையால் மூவாயிரம் பேர் மனமாற்றம் அடைந்து திருமுழுக்கு பெற்றார்கள். அடுத்து நாம் வியப்புடன் நோக்கும் தொடக்கக் கால நம்பிக்கையுடையோரின் வாழ்க்கை முறை. இவர்கள் அனைவரும் ஒரே உள்ளமும் ஒரே உயிருமாய் இருந்தனர். எல்லாம் அவர்களுக்குப் பொதுவாய் இருந்தது. தேவையில் உழல்வோர் எவரும் அவர்களுள் காணப்படவில்லை. இவர்கள் திருத்தூதர் கற்பித்தவற்றிலும் நட்புறவிலும் அப்பம் பிடுவதிலும் இறைவேண்டலிலும் உறுதியாய் நிலைத்திருந்தார்கள். ஆண்டவரும் தாம் மீட்டுக் கொண்டவர்களை நாள்தோறும் அவர்களோடு சேர்த்துக் கொண்டேயிருந்தார். இத்தகைய இயேசுவின் இறையாட்சிக் கனவு நனவாகி பொதுவுடமை சமுதாயத்திற்கு வித்திட்ட இவர்களின் வாழ்வு முறைக்கு பின்புலத்தில் இருந்து கிரியா ஊக்கியாக செயல்பட்டவர் நம் அன்னை மரியா. அவரை தூய ஆவியார் இயக்கிக் கொண்டேயிருந்தார். இயேசுவின் பணிகளில் தொய்வு ஏற்படா வண்ணம் மரியாவும் பெண் சீடர்களும் இக்காலத்தில் முன்னிலையில் செயல்பட்டனர் என்றால் மிகையாகாது. மரியா திருத்தூதர்களோடு இணைந்து செபித்தார். இறைவேண்டலில் அவர்களை இணைத்தார். தூய ஆவியாரின் கொடைகளையும் கனிகளையும் நிறைவாகப் பெற்ற திருத்தூதர்களை இயேசுவின் உயிர்ப்பின் செய்தியை படைப்பனைத்திற்கும் அறிவிக்க அனுப்பினார்.

நிறைவுரை

அன்னை மரியாவின் எருசலேம் பயணம் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது. சிலுவையைச் சுமந்து கொண்டு இயேசு எருசலேம் வீதிகளில் நடந்தபோது, கல்வாரி மலை வரை அவரைப் பின்தொடர்ந்து, அவருடைய பாடுகளில் பங்குகொண்ட அனுபவத்தைப் பெற்றிருந்த மரியா, இப்போது பெருமையுடனும் நம்பிக்கையுடனும் எருசலேம் நோக்கிப் பயணிக்கிறார். அங்கே தூய ஆவியார் அவருக்காக வைத்திருந்த பணிகள் ஏராளம். அவற்றை

ஒவ்வொன்றாக முழுமையாக நிறைவேற்றிக் கொண்டே இருக்கிறார். அன்னை மரியாவின் அனைத்து செயல்பாடுகளுக்கும் அடிப்படையாக இருந்தது அவரது ஆழ்ந்த இறைவேண்டலும் இறை ஒன்றிப்பும் ஆகும். அவரது செபத்தில் இரண்டு முக்கியமான பரிமாணங்களைக் காணலாம். முதலாவது, இறைவார்த்தையைத் தியானித்து, அதைத் தமது இதயத்தில் பொக்கிஷமாக வைத்து ஒரு சிறந்த தியான யோகியைப் போல, மரியா இறைவனோடு ஆழமாக ஒன்றித்திருந்தார். அமைதியின் ஆழத்தில் இறைவனின் குரலைக் கேட்டு, அந்தக் குரலுக்கு கீழ்ப்படிந்து, இறைவனின் திருவுளத்தைத் தமது வாழ்வில் நிறைவேற்றினார்.

இரண்டாவதாக, அவரது நம்பிக்கை வெறும் உள்ளார்ந்த அனுபவமாக நின்றுவிடவில்லை; அது செயலாக மாறியது. இயேசுவைப் போலவே ஏழைகளையும் எளியவர்களையும் தேடினார். துன்புறுவோருக்கு உதவிக்கரம் நீட்ட விரைந்தார். மரியா பாடிய விடுதலைக் கீதம், இறையாட்சியின் சமூகம் எவ்வாறு இருக்க வேண்டும் என்பதற்கான ஓர் இறைவாக்காக ஒலிக்கிறது. அன்றைய சமூக, அரசியல், பொருளாதார மற்றும் பண்பாட்டு நிலைகளையே சவால் செய்யும் ஒரு புரட்சிகரமான பாடலாகும். எனவே, மரியா ஒரு இறைவாக்கினராகவும், இறைவாக்குத் தன்மை கொண்ட புரட்சிகரப் பெண்ணாகவும் விளங்குகிறார். தாழ்ச்சி, ஏழ்மை, எளிமை ஆகியவற்றைத் தமது வாழ்வில் ஏற்றுக்கொண்டதோடு, சமுதாயத்தை மாற்றக்கூடிய பெண்களையும் தம்மைச் சுற்றி ஒன்றிணைத்தார்.

ஆகவே, நமது செபம் நமது உதடுகளோடு மட்டும் நின்றுவிடக் கூடாது. இதயத்தின் ஆழத்திலிருந்து செபம் ஊற்றெடுக்க வேண்டும். செபம் வாழ்வாகவும், வாழ்வு பணியாகவும், பணி சாட்சியாகவும் மாற வேண்டும். நாம் ஒவ்வொரு நாளும் ஆண்டவரின் மீட்பின் கனிகளை அனுபவிப்பதோடு, அந்த அனுபவத்தை மற்றவர்களும் பெறுவதற்கான வழியைத் திறந்து வைக்க வேண்டும். நமது வாழ்வாலும், வார்த்தைகளாலும், செயல்களாலும் இறைவார்த்தைக்கு சாட்சியாக இருப்போம். நம்மைச் சுற்றியுள்ள ஏழைகள், துன்புறுவோர், நம்பிக்கை இழந்தோர் மற்றும் மாற்றத்திற்காகக் காத்திருப்போர் அனைவரிடமும் இறைவனின் இரக்கத்தையும் அன்பையும் கொண்டு செல்வோம்.

"செபிக்கும் மரியாவைப் போல செபிப்போம்;

நம்பும் மரியாவைப் போல நம்புவோம்;

செயல்படும் மரியாவைப் போல செயல்படுவோம்;

சாட்சியம் அளிக்கும் மரியாவைப் போல சாட்சிகளாவோம்."

இவ்வாறு நமது எருசலேம் பயணமும் வெறும் பயணமாக இல்லாமல், தூய ஆவியாரால் வழிநடத்தப்படும் ஒரு இறை அழைப்பின் பயணமாக அமையட்டும். இந்த அருளையும் வரத்தையும் அன்னை மரியாவிடம் பணிவுடன் வேண்டுவோம்.

பயணம் தொடர்கிறது . . .

திருத்தலம் நோக்கி

திரஸ்தேவேரே அன்னையின் திருத்தலம், உரோமை

92

தூய மரியன்னை பேராலயம், ஆசென் - ஜெர்மனி
அருட்பணி. **சகாயராசு** ம.ஊ.ச, இத்தாலி





மரியாள் இறைவனின் தாய் என்பதை விசுவசிக்காத எவரும் இறைவனுக்கு அந்நியனாகிறார் - நசியான் நகரத்து புனித கிரகோரியார்.

அமைதியை நிறைவாக தரும் அன்னையின் திருத்தலங்கள் உலகெங்கும் பரவியிருக்கின்றன. லூர்து அன்னை திருத்தலம், சலேத்து அன்னை திருத்தலம், பாத்திமா அன்னை திருத்தலம், குவாதலூரப்பே அன்னை திருத்தலம், அப்ரசிதா திருத்தலம், வேளாங்கண்ணி ஆரோக்கிய அன்னை திருத்தலம் என்று நாம் அறிந்த திருத்தலங்கள் ஏராளம். இவற்றிகெல்லாம் தாயாக திகழ்வது உரோமையில் உள்ள திரெஸ்தேவேரே பகுதியில் அமைந்துள்ள அன்னையின் மிகப் பழமையான ஆலயம் ஆகும்.

உரோமை நகருக்கு கிறிஸ்தவம் பரவியது இறைவனின் திட்டமே. இயேசுவின் உயிர்ப்பு, விண்ணேற்புக்கு பிறகு பெந்தக்கோஸ்து நாளில் பேதுருவின் அருளுரையை கேட்டவர்களில் உரோமையிலிருந்து வந்தவர்களும் இருந்தார்கள் (காண்: திப 2,10). இவர்கள் உரோமை திரும்பியவுடன் தாங்கள் கேட்ட செய்தியையும், தாங்கள் இயேசுவின் மீது கொண்ட நம்பிக்கையை எடுத்துரைத்திருக்க வேண்டும். அவர்களின் வழியாக உயிர்த்த இயேசுவே மெசியா என்ற நம்பிக்கை கொண்ட யூதரும், பிற மதத்தவரும் கிறிஸ்த திருச்சபையாக உருவெடுத்தனர். பேரரசர் கிலவுதியோ காலத்தில், அதாவது கி.பி. 49ஆம் ஆண்டில் "கிறிஸ்தோஸ்" என்ற புரிதலில் ஏற்பட்ட பிரச்சினைகள் காரணமாக,





கிறிஸ்தவர்கள் வெளியேற்றப்பட்டதை திருத்தூதர் பணிகள் எடுத்துரைக்கிறது (காண்: திப 18,2-3). இதன்பின் வந்த பேரரசர்களின் ஆட்சியில் வேதகலாபனைகளும், ஆதரவும், சகிப்புத் தன்மையும் மாறி மாறி ஏற்பட்டுக் கொண்டிருந்தன. இவ்வளவு தடைகலுக்கும் இடையில் புனித பேதுரு, புனித பவுல் இவர்களின் உரோமை பயணம் அமைந்திருந்தது. இவர்களின் பயணம் ஒரு வழிப்பயணமாக அமைந்து, இறுதியில் இருவரும் மறைசாட்கியராக உரோமையிலேயே கொல்லப்பட்டனர் என்பது வரலாறு.

இவர்களின் அடிச்சுவட்டைப் பின்பற்றி இரத்தம் சிந்தியோர் பல்லாயிரம். இவர்களின் தியாகத்தின் மீது உருவானதுதான் உரோமை திருஅவை. இத்திருஅவையின் விசுவாசத்தை கட்டியெழுப்பவும், ஒன்று சேர்த்து வைக்கவும் உதவியது அவர்களின் இணைந்து வழிபாட்டுத் தலங்கள். வீடுகளில் ஒன்றுகூடி செபித்து, அப்பத்தை பிட்டு தங்களின் விசுவாசத்தையும், வாழ்வையும் பகிர்ந்து கொண்டனர். இவ்விசுவாச திருப்பயணத்தின் அவர்களுக்கு முன்மாதியாக, உடன் பயணிப்பவராக அன்னை மரியாள் இருந்தார். எனவே, அவரின் உடனிருப்பை எப்போதும் உணரும் விதமாக ஆலயங்கள் அவருக்கு நேர்ந்தளிக்கப்பட்டன. அவ்வகையில் உரோமையின் மிகப்பழமையான ஆலயங்களுள் ஒன்றாக இருப்பது திரஸ்தேவேரே புனித அன்னை மரியா திருத்தலம் ஆகும்.

இப்பழமையான ஆலயத்தின் முதல் பகுதி திருத்தந்தை முதலாம் கலிஸ்துவால் கி.பி. 220 ஆண்டில் ஒரு இல்லக் கோவிலாக கட்ட ஆரம்பிக்கப்பட்டது. இப்பகுதியானது பேரரசர் அலெக்சாண்டர் சேவேருஸ் அவர்களால் கிறிஸ்தவர்களின் பயன்பாட்டிற்கு ஒப்படைக்கபட்டது. திருத்தந்தையர்களின் குறிப்பின்படி, அங்கு நிலவிய ஒரு பிரச்சினையை முடிவுக்கு கொண்டு வந்த பேரரசர், இப்பகுதியானது கடவுள் வழிப்பாட்டில் ஈடுபட்டிருப்பவர்களின் கட்டுப்பாட்டில் இருக்க வேண்டும். அவர்கள் எக்கடவுளை வழிபாட்டாலும் பிரச்சினையில்லை என்று ஆணை பிறப்பித்தார். இதன் தொடர்ச்சியாகவே, இப்பகுதி முழுவதும் கிறிஸ்தவர்கள் வாழும் பகுதியாக மாறியது. இந்த ஆலயமும் உரோமை ஆயரின் இருப்பிடமாக மாறியது. இல்லக் கோவிலாக கட்ட ஆரம்பிக்கப்பட்ட இவ்வாலயத்தை கி.பி. 340ஆம் ஆண்டு நன்கு விரிவாக்கி ஆலயமாக கட்டி முடித்தவர் திருத்தந்தை முதலாம் ஜீலியஸ் ஆவார்.



கி.பி. 313ஆம் ஆண்டு பேரரசர் கான்ஸ்டன்டைன் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்ட மிலான் சாசனம் கிறிஸ்தவர்களின் மீது



சகிப்புத்தன்மையையும், அவர்களின் வழிபாட்டிற்கு அனுமதியையும் வழங்கியது. கிறிஸ்தவம் வேகமாக வளர, ஆலயங்களின் எண்ணிக்கையும் அதிகமாகியது. முன்பு சிறிய அளவில் கட்டப்பட்ட ஆலயங்கள் புணரமைக்கப்பட்டன. அவ்வகையில், கால ஓட்டத்தில் திரஸ்தேவேரே ஆலயம் 5ஆம் மற்றும் 8ஆம் நூற்றாண்டுகளில் புதுப்பிக்கப்பட்டது.

கி.பி. 1140-43 ஆம் ஆண்டுகளில் திருஅவையை வழிநடத்திய திருத்தந்தை இரண்டாம் இன்னசென்ட் அவர்களால் இவ்வாலயமானது இடிக்கப்பட்டு, அதன் பழைய அஸ்திவாரத்தின் மேல் புதிய கோவிலானது கட்டப்பட்டது. இவர் இறந்த பிறகு அடக்கம் செய்வதற்கான கல்லறையும் கட்டப்பட்டு அங்குதான் அவர் அடக்கம் செய்யப்பட்டார்.

12ஆம் நூற்றாண்டில் கட்டப்பட்ட ஆலயம் இன்றளவும் பழமை மாறாமல் அனைவரின் உள்ளத்தையும் ஈர்க்கும் வகையில் விண்நோக்கி நிற்கிறது. ஆலயத்தின் மையப்பகுதியை தாங்கி நிற்கும் பிரமாண்டமான 22 கிரனைட் தூண்களின் உச்சியில் கொரிந்து நகர கலை வேலைப்பாடுகள் உள்ளன. இத்தூண்களும், ஆலய முகப்பில் உள்ள மிகப்பெரிய கதவும் கரகல்லா குளியல் தோட்டத்திலிருந்து கொண்டுவரப்பட்டன.

இவ்வாலயத்தில் உள்ள தனித்துவம் வாய்ந்த மொசைக் சித்திரமானது பைசான்டைன் ஓவியக் கலை பராம்பரியத்தை சார்ந்ததாகும். இரக்கத்தின் அன்னை என்றழைக்கப்படும் இந்த ஓவியத்தில் அன்னை மரியாள் குழந்தையுடன் இருப்பதை தத்ரூபமாக வடித்திருக்கிறார்கள். இந்த பழமையான ஓவிய பராம்பரியத்தில் இன்று உலக அளவில் 5 மூல ஓவியங்கள் (original) தான் உள்ளன. அவற்றில் ஒன்று திரஸ்தேவேரே மரியாள் ஆலயத்தில் உள்ளது. இந்த ஓவியமானது 6 முதல் 9ஆம் நூற்றாண்டை சார்ந்ததாகும்.

12ம் மற்றும் 13ம் நூற்றாண்டை சார்ந்த எண்ணற்ற மொசைக் ஓவியங்கள் இந்த ஆலயத்தில் உள்ளன. கி.பி. 1291ல் பியத்ரோ கவில்லினி வடிவமைத்த அன்னையின் வாழ்க்கை என்கிற மொசைக் ஓவியம் காண்போரின் இதயத்தை கொள்ளை கொள்வதாக அமைந்துள்ளன. இவ்வோவியத்தின் மேல் கி.பி. 1130 - 1143 ஆண்டுகளில் வடிவமைக்கப்பட்ட அன்னைக்கு முடிசூட்டப்படும் ஓவியம் நம் கண்களை விட்டு அகலுவதில்லை. இவ்வோவியத்தின் ஒரு பகுதியில் திருத்தை இரண்டாம் இன்னசென்டின் படமும் இடம் பெற்றுள்ளது. ஆலயத்தின் பீடத்தின் மையப்பகுதியில் எண்கோணத்தில் கட்டப்பட்டுள்ள கோபுரத்தில் அன்னையின் விண்ணேற்பு தத்ரூபமாக தோமினிக்கோவால் வரையப்பட்டுள்ளது.

இந்த ஆலயத்தில் புனித அப்போலினாவின் தலையும், சிலுவையில் இயேசுவுக்கு காடி வழங்கப் பயன்படுத்தப்பட்ட ஈசோப்பின் ஒரு பகுதியும் புனிதப் பண்டங்களாக வைக்கப்பட்டுள்ளன. இங்கு திருத்தந்தை கலிஸ்டஸ், திருத்தந்தை இரண்டாம் இன்னொசென்ட், எதிர் திருத்தந்தை இரண்டாம் அனெக்லடஸ் ஆகியோரின் கல்லறைகள் உள்ளன.

உரோமென்ஸ்கோ கட்டிட கலையில் கட்டப்பட்டிருக்கின்ற மணிக்கூண்டு 12ம் நூற்றாண்டை சார்ந்ததாகும். இதன் உச்சியில் அன்னை மரியா குழந்தையுடன் உள்ள ஓவியம் உள்ளது. ஆலய முகப்பில் குழந்தைக்கு பாலூட்டும் அன்னையின் மொசைக் ஓவியம், விளக்குகளுடன் சூழ்ந்து நிற்கு பத்து பெண்களுடன் வரையப்பட்டுள்ளது. இந்த ஓவியமானது பிற்கால மறுமலர்ச்சி காலத்தில் வரையப்பட்ட ஓவிய வகையை சார்ந்ததாக உள்ளது.

கி.பி. 1702ஆம் ஆண்டு கார்லோ பொன்டானா ஆலயத்தின் முகப்பை புதிப்பித்தார். அத்துடன் கி.பி. 1472ல் ஆலய சதுக்கத்தில் அமைக்கப்பட்டுள்ள நீரூற்றையும் புதுப்பித்தார்.

கிறிஸ்தவத்தின் தொடக்கத்திலிருந்து இன்று வரை விசுவாசத்தின் சாட்சியாக நிலைத்து நிற்கும் அன்னையின் இத்தேவாலயத்தில் அமர்ந்திருப்பதே பெரும் பாக்கியம். நூற்றாண்டுகளாக செபிக்கப்பட்ட செபங்களும், பாடல்களும், அமைதியில் நம் உள்ளத்தில் கேட்பதை உணர முடியும். நம்பிக்கை நிறைந்த மனநிலையோடு அங்கிருக்கும் ஒவ்வொரு ஓவியத்தையும் காணும் போது நம் நம்பிக்கை திடப்படுகிறது. அமைதியில் நம்மை அரவணைக்கும் அன்னையின் கரங்களின் ஸ்பரிசத்தால் மெய்சிலிர்த்து போகிறோம்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து

"ஜீவ மாதாவை நம்பி வேண்டிக்கொண்டோம் 39-வது வாரம் வரை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் குழந்தை பிறந்தது."

மடோனாஸ் - செங்கல்பட்டு

2019ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்ற நிலையில், 25வது ஆண்டில் எங்கள் மகள் கருவுற்றார். கருவுற்ற ஐந்தாவது மாதத்திலேயே கருப்பை திறக்கும் நிலை ஏற்பட்டதால், ஆஸ்திரேலியாவில் இருந்த எங்களுக்கு மிகுந்த கவலை ஏற்பட்டது. மருத்துவர்கள் உடனடியாக சிகிச்சை அளித்து, தையல் போட்டு, 28 வாரங்களுக்குப் பிறகு குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் எடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று தெரிவித்தனர். ஆனால் நான் ஜீவ மாதாவை முழுமையாக நம்பி, இக்கோயிலுக்கு வந்து, "39வது வாரம் வரை என் மகளுக்கும் குழந்தைக்கும் எந்தத் தீங்கும் நேரக்கூடாது இதற்கு நான் இங்கு சாட்சி சொல்வேன்" என்று வேண்டிக்கொண்டேன். ஜீவ மாதாவின் அருளால், 39வது வாரத்தில்தான் குழந்தை அறுவை சிகிச்சை மூலம் பிறந்தது. குழந்தையை எடுத்தபோது மருத்துவர்கள், "நாங்கள் போட்ட தையல் ஒரு இடத்திலும் திறக்கவில்லை எப்படி போட்டோமோ அதேபோல இருந்தது" என்று தெரிவித்தனர். இது எங்கள் குடும்பத்திற்கு ஜீவ மாதா அளித்த மிகப்பெரிய வரமாக நான் கருதுகிறேன். அதனால் ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பியவுடன், ஜீவ மாதாவுக்கு நன்றி செலுத்தி இந்தச் சாட்சியைச் சொல்ல வந்துள்ளேன். இயேசுவுக்கே புகழ் ஜீவ மாதாவுக்கு நன்றி

விவிலியக் குறுக்கெழுத்துப் போட்டி அக்டோபர், 2026.
எரேமியா 1 முதல் 13 வரைக்கான வினாக்கள்



4									3
	8							7	
		13					12		
			16						
	9								
			14			15			
		10					11		
	5							6	
1									2

வலமிருந்து இடம்

2. அவர்கள் வில்லும் ஈட்டியும் ஏந்தியுள்ளார்கள் அவர்கள் கொடியவர் இரக்கமற்றவர் அவர்களின்_____கடலின் இரைச்சலைப் போன்றது

3. தங்களின் கடவுளாகிய ஆண்டவரின் குரலைக் கேளாத, அவர் தண்டித்தும் திருந்தாத_____இதுவே, என அவர்களிடம் சொல், உண்மை அழிந்து போயிற்று. அது அவர்கள் வாயிலிருந்து அகன்று போயிற்று.

7. ஆண்டவர் தம் கையை நீட்டி என் வாயைத் தொட்டு என்னிடம் கூறியது இதோ பார் என் சொற்களை உன்_____வைத்துள்ளேன்.

இடமிருந்து வலம்

1. காலாள்களோடு ஓடியே நீ களைத்துப் போனாய் குதிரைகளோடு நீ எவ்வாறு போட்டியிட முடியும்?_____ நாட்டிலேயே நீ அஞ்சுகிறாய் என்றால், யோர்தானின் காடுகளில் நீ என்ன செய்வாய்?

4. நான் உன்னை என் மக்களுக்குள் மதிப்பீடு செய்பவனாகவும்,_____ ஏற்படுத்தினேன் நீ அவர்களின் வழிகளை அறிந்து மதிப்பீடு செய்வாய்.

5. ஆண்டவர் என்னிடம் கூறியது_____என்று சொல்லாதே யாரிடமெல்லாம் உன்னை அனுப்புகின்றேனோ அவர்களிடம் செல் எவற்றை எல்லாம் சொல்லக் கட்டளை இடுகின்றேனோ அவற்றைச் சொல்.

8. வெட்டுவதற்குக் கொண்டு செல்லப்படும் சாந்தமான_____ இருந்தேன்

10._____இதைக் கண்டு திடுக்கிடுங்கள் அஞ்சி நடுங்கித் திகைத்து நில்லுங்கள், என்கிறார் ஆண்டவர்.

13. நான்_____ஒன்று சேர்க்க விரும்பினேன். ஆனால், திராட்சைக் கொடியில் பழங்கள் இல்லைஞு அத்தி மரங்களில் கனிகள் இல்லை, இலைகள்கூட உதிர்ந்து போயின. நான் அவர்களுக்குக் கொடுத்தது அவர்களிடமிருந்து நழுவிப் போயிற்று.

14. அவர்கள் நாக்கு கொல்லும் _____ அது பேசுவது வஞ்சனை எல்லாரும் தம் வாயால் அடுத்திருப்பவர்களோடு சமாதானமாய்ப் பேசுகின்றனர் உள்ளத்திலோ அவர்களுக்குக் குழி பறிக்கின்றனர்.

16. எல்லாரும் அடுத்திருப்பவரை ஏமாற்றுகின்றனர் யாருமே_____ பேசுவதில்லை பொய் பேசத் தங்கள் நாவைப் பழக்கியுள்ளார்கள் குற்றம் புரிந்தே சோர்ந்து போனார்கள்.

மேலிருந்து கீழ்

3. "நீ சென்று எருசலேம் நகரினர் அனைவரும் கேட்கும் முறையில் இவ்வாறு பறைசாற்று, ஆண்டவர் கூறுவது இதுவே உன் எதனின்? அன்பையும் மணமகளுக்குரிய காதலையும் விதைக்கப்படாத பாலைநிலத்தில் நீ என்னை எவ்வாறு பின்பற்றினாய் என்பதையும் நான் நினைவுகூர்கிறேன்.

4. எவர் தங்கள் மந்தையோடு அவளிடம் வருவார்கள்? அவளைச் சுற்றிலும் கூடாரங்கள் அடிப்பார்கள் அவரவர் தம் இடத்தில் மேய்ப்பார்கள்.

8. நீங்கள் இதற்குச் செவிகொடுக்காவிட்டால், உங்கள் எதனை முன்னிட்டு என் உள்ளம் மறைவில் அழும்? அழுகை மிகுதியால் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்தோடும் ஏனெனில், ஆண்டவரின் மந்தை கைப்பற்றப்பட்டுள்ளது.

9._____பாராட்ட விரும்புபவர்,"நானே ஆண்டவர்" என்பதை அறிந்து புரிந்து கொள்வதிலும், பேரன்போடும் நீதியோடும் நேர்மையோடும் உலகில் நான் செயலாற்றுகிறேன் என்பதிலும் பெருமைபாராட்டுவாராக ஏனெனில், இவற்றில் நான் மகிழ்ச்சியடைகிறேன், என்கிறார் ஆண்டவர்.

12. ஆண்டவரே நான் அறிவேன்: மனிதர் செல்ல வேண்டிய வழி அவர்களின் எதில் இல்லை? நடப்பவன் காலடிப் போக்கும் அவர்களின் அதிகாரத்தில் இல்லை.

13. எது ஒருவரது இடையோடு ஒட்டியிருப்பதுபோல, இஸ்ரயேல், யூதா வீட்டார் யாவரும் என்னோடு ஒன்றித்திருக்கச்செய்தேன்.? அவர்கள் எனக்கு

மக்களாகவும் பெயராகவும் புகழாகவும் மாட்சியாகவும் இருக்கச்செய்தேன். அவர்களோ எனக்குச் செவிசாய்க்கவில்லை" என்கிறார் ஆண்டவர்.

16. சேபா நாட்டுத் தூபமும் தூரத்து நாட்டு நறுமண நாணலும் எனக்கு எதற்கு? உங்கள் எரிபலிகள் எனக்கு ஏற்புடையவை அல்ல, உங்களின் மற்றைய பலிகளும் எனக்கு என்ன தருவதில்லை.

கீழிருந்து மேல்

1. என் மக்கள்_____என்னை அவர்கள் அறிந்து கொள்ளவில்லை மதிகெட்ட மக்கள் அவர்கள் உய்த்துணரும் ஆற்றல், அவர்களுக்கில்லை தீமை செய்வதில் அவர்கள் வல்லவர்கள் நன்மை செய்ய அவர்களுக்குத் தெரிவதில்லை.

2. அக்காலத்தில் எருசலேமை "யாருடைய அரியணை" என அழைப்பார்கள்? ஆண்டவரின் பெயரை முன்னிட்டு எல்லா மக்களினத்தாரும் எருசலேமில் வந்து கூடுவர். தங்கள் தீய இதயப் பிடிவாதத்தின்படி இனி நடக்கமாட்டார்கள்.

6. என் பெயர் விளங்கும் இந்தக் கோவில் உங்கள் பார்வையில் _____ யாகி

விட்டதோ? நானும் பார்த்துக் கொண்டுதான் இருக்கிறேன்," என்கிறார் ஆண்டவர்.

10. ஆண்டவரே உண்மையான கடவுள் அவரே_____ கடவுள் என்றும் ஆளும் அரசர் அவர் வெஞ்சினம் கண்டு நிலம் நடுங்கும் அவர் கடும் கோபத்தை வேற்றினத்தார் தாங்கிக்கொள்ளார்.

11. ஆண்டவரே உமக்கு நிகர் யாருமிலர் நீர் பெரியவர் உமது பெயர்_____ மிக்கது.

15. சாக்கு உடை உடுத்திக்கொள்ளுங்கள். அழுது புலம்புங்கள் ஒப்பாரி வையுங்கள் ஏனெனில், ஆண்டவரின்_____ நம்மை விட்டு நீங்கவில்லை.

தயாரிப்பு : த.எட்மன், OSSM, திருச்சி-21 (அலைபேசி எண்: 94436 72226)
விடைகள் அனுப்ப இறுதிநாள் 25-07-2026
முகவரி :
விவிலிய குறுக்கெழுத்துப் போட்டி,
பதிப்பாசிரியர் "அப்படியே ஆகட்டும்",
ஜோதிமாதா ஆலயம்,
ராஜீவ்காந்தி சாலை,
ஓக்கியம்பேட்டை,
சென்னை - 600097.

திருஅவையின் வரலாற்றில் அன்னை மரியாவின் காட்சிகள்



அருட்பணி. **ஜெகநாதன்.** ம.ஊ.ச.
ஜெகன் மாதா இல்லம் திருச்சி 21.

புனித மெக்தில்ப் ஆப் ஹாக்குபோர்ன் *(1241-1298 /99)*. இவர் ஜெர்மனியின் ஹெல்பா (Helfta) மடத்தில் வாழ்ந்த பெனடிக்டன் துறவியாவார். மிகுந்த ஆன்மீக அனுபவங்களுக்கு பெயர் பெற்றவர். 2010ம் ஆண்டு திருத்தந்தை பதினாராம் பெனடிக்ட் இவரைப்பற்றி பொது மக்கள் சந்திப்பின்போது விரிவாகப் பேசியுள்ளார். புனித மெக்தில்டிற்கு இயேசுவும் புனித கன்னி மரியாவும் காட்சியில் தோன்றியதாக அவரது ஆன்மீக அனுபவங்கள் குறிப்புகளில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. அவை பின்னர் Liber Specialis Gratiae என்ற ஆன்மீகப் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. குறிப்பாக தன் இறப்பு நேரத்தில் மரியா தன்னுடன் இருக்கவேண்டும் என்று புனித மெக்தில்ப் மரியாவிடம் வேண்டினார். அதற்கு மரியா அவருக்குத் தோன்றி ஆறுதல் அளித்ததாக மரபு கூறுகின்றது. இதனுடன் தொடர்புடைய மூன்று அருள் மிகப் பெற்றவரே என்ற செபம் சொல்லுகின்ற பழக்கம் புனித மெக்தின்டின் வாழ்க்கை வழியாக இந்தப் பக்தி முயற்சி பரவப்பட்டதாக மரபு கூறுகின்றது. மரியா மெக்தில்லுக்குத் தொன்றி தினமும் மூன்று முறை அருள் மிகப் பெற்றவரே செபிக்குமாறு அறிவுறுத்தியதாகக் கூறப்படுகின்றது. ஒவ்வொரு அருள்நிறைந்த மரியே என்ற செபம் மூவொரு இறைவனின் மூன்று நபர்களின் அருளினை நினைவுகூர்வதாக விளக்கப்படுகின்றது. முதல் "அருள் மிகப்பெற்றவரே" தந்தையாகிய இறைவனிடமிருந்து பெற்ற வல்லமைக்காக. இரண்டாவது "அருள் மிகப் பெற்றவரே" மகனாகிய இயேசுவிடமிருந்து பெற்ற ஞானத்திற்காக. மூன்றாவது "அருள்மிகப் பெற்றவரே" தூய ஆவியாரிடமிருந்து நாம் பெற்ற நட்புறவுக்காக.

புனித மெக்தில்டின் ஆன்மீக அனுபவங்களில் மரியா வெறும் அருளைப் பெற்றவர் மட்டுமல்ல கிறிஸ்துவிடம் நம்மை அழைத்துச் செல்பவர். திருத்தந்தை பெனடிக்ட் XVI மெக்தில்டின் காட்சிகளைப் பற்றி பேசும்பொழுது மரியா தொடர்ந்து நம் அனைவரையும் அவர் மகனிடம் அழைத்துச்செல்கின்றார். எனவே மெக்தில்டின் மரியா பக்திதான் முக்கியமான மையச் செய்தி. மரியாவிடம் செல்வது மரியாவிடமே நின்றுவிடுவதற்காக அல்ல மரியா வழியாக கிறிஸ்துவிடம் செல்வதற்காக மேலும் மெக்தில்டின் அனுபவத்தை இன்றைய அர்த்தத்தில் திருஅவையால் அங்கீகரிக்கப்பட்ட மரியாவின் காட்சிகள் என்றழைப்பது சரியாக இருக்காது இது தனிப்பட்ட மெய்ஞான ஆன்மீகக் காட்சிகள் (private mystic visions). இதைத் திருஅவையால்

அங்கீகரிக்கப்பட்ட லூர்து அல்லது பாத்திமா போன்ற காட்சிகளிலிருந்து வேறுபடுத்திப் பார்க்கவேண்டும்.

மால்அமஸ்பரியின் குலியெல்மோ (William)

Malmessuray (Gulglichsmo di Malmessury): இவர் ஒரு பெனடிக்டின் துறவி, வரலாற்றாசிரியர், மற்றும் எழுத்தாளர். மரியாவைப்பற்றிய பக்தியைப் பற்றி அவர் எழுதியதும் குறிப்பாக கன்னி மரியாவின் அற்புதங்கள், (Miracles of Blessed Virgin Mary) என்ற நூலை கி.பி. 1136-37) ஆண்டுகளில் எழுதிய அந்த நூலில் பல நினைழ்வுகளைப் பதிவு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அவரது எழுத்துக்களில் அன்னை மரியா மக்களுக்காகப் பரிந்து பேசுபவராகவும், அவரை நம்பி செபிப்பவர்களுக்கு பாதுகாவலியாகக் காட்டப்படுகின்றார். மரியாவிடம் நம்பிக்கையுடன் வேண்டிக் கொண்டாடுபவர்களுக்கு அவர் உதவியதாகக் கூறப்படும் பல அற்புதக் கதைகளை குலியெல்மோ தொகுத்துள்ளார்.

மேலும் தனது நூலின் முன்னுரையில் மரியாவின் அமல உற்பவம் (Immaculate Conception) மற்றும் அவரது உடலோடு விண்ணேற்பு (Assumption) ஆகியவற்றை குறிப்பிட்டிருப்பது அவர் வாழ்ந்த அந்தக் காலத்தில் மேற்கு கிறிஸ்தவ உலகில் இக்கருத்துக்கள் இன்னும் இருந்து வருவதாலும் ஒரே விதமாக ஏற்றுக்கொள்படாத நிலையில் இவர் குறிப்பிட்டிருப்பது இவர் இதை ஆதரிப்பதற்காகவே என்பதைப் புறிந்துகொள்ளப்படுகின்றது.

இதற்காகவே இவர் எல்சினோ என்ற துறவிக்கு நிகழ்ந்ததாக கூறப்படும் ஒரு புதுமையை விவரிக்கின்றார். எல்சினோ வில்லியம் தி கான்கரர் என்பவாரால் டென்மார்க்கு மண்ணரிடம் ஒரு தூதுப்பணிக்காக அனுப்பபட்ட துறவி. அவர் பயணம் மேற்கொண்டபோது திடீரென ஒரு கடுமையான புயலில் சிக்கிக்கொண்டார். அப்பொழுது கன்னி மரியாவிடம் வேண்டிக்கொண்டார். அதற்கு மரியா அவரை மீட்பதற்காக ஒரு வானதூதரை அனுப்புகின்றார். அப்பொழுது அந்த வானதூதர் அவருடைய உயிரைப் பாதுகாப்பதற்கு பிரதிபலனாக மரியாவின் கருத்தரிப்பு விழாவை (feast of Immaculate conception) கொண்டாட வேண்டும் என்று கேட்டதாகக் கூறப்படுகின்றது. இங்கு மரியாவின் கருத்தரிப்பு பற்றிப் பேசுகின்றபொழுது நாம் புரிந்துகொள்ள வேண்டிய செய்தி என்னவென்றால் இங்கு பேசப்படுவது புனித அன்னா மற்றும் புனித சுவக்கின் ஆகியோரின் முதிர்ந்த வயதில் மரியா பிறந்ததைக் குறிப்பிடப்பட்டுள்ளது. பிறகு இதுவே Immaculate Conception என்னும் கோட்பாட்டிற்கு இட்டுச்செல்லும் பாலமாவும் அமைந்தது. எனவே மரியாவின் கருத்தரிப்பு இயேசுவின் கன்னிப் பிறப்பு இரண்டையும் இங்கு குழப்பிவிடக்கூடாது. கத்தோலிக்க திருஅவையின் இறுதிப் போதனையினபடி மரியா தனது தாயின் வயிற்றில் உருவாகும் முதல கனத்திலிருந்து ஆதிப்பாவத்தின் கறையிலிருந்து பாதுகாக்கப்பட்டார். இதைத்தான் மரியாவின் அமல உற்பவ திருவிழா நமக்கு எடுத்துக் கூறுகின்றது. மேலும் 1136-37 ஆண்டுகளில் இந்தக் கோட்பாடு திருஅவையில் பிரகடணப்படுத்தப்பட்டது என்பது குறிப்பிடப்படவில்லை.

பலநூற்றாண்டுகள் இறையியல் விவாதங்கள் பக்தி மரபிற்குப் பிறகே இறுதி வடிவம் அமைக்கப்பட்டது. இறுதியாக திருத்தந்தை ஒன்பதாம் பக்திநாதர் 1854ஆம் ஆண்டு டிசம்பர் 8 ஆம் நாள் Ineffabilis Deus என்ற அறிக்கையை பிரகடனப்படுத்தினார். இடைக்காலத்தில் ஒரு இறையியல் கருத்தை மக்களிடம் கொண்டு செல்ல அற்புதக் கதைகள் முக்கியப் பங்கு வகிக்கின்றன. அந்தக் காலத்தில் அனைவரும் இறையியல் நூல்களைப் படிக்கவில்லை. ஆனால் ஒரு அற்புதக் கதைநிகழ்வு எடுத்துச் செல்வதன் வழியாக மக்களின் மனதில் எளிதில் பதிந்துவிடும் எனவே இத்தகைய கதைகள் பக்தியை வளர்க்கும் கருவிகளாகப் பயன்படுகின்றது.

(தொடரும்.)

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து

"ஜீவ மாதாவை நம்பி வேண்டிக்கொண்டோம் 39-வது வாரம் வரை எந்தப் பிரச்சினையும் இல்லாமல் குழந்தை பிறந்தது."

மடோனாஸ் - செங்கல்பட்டு

2019ஆம் ஆண்டு திருமணம் நடைபெற்ற நிலையில், 25வது ஆண்டில் எங்கள் மகள் கருவுற்றார். கருவுற்ற ஐந்தாவது மாதத்திலேயே கருப்பை திறக்கும் நிலை ஏற்பட்டதால், ஆஸ்திரேலியாவில் இருந்த எங்களுக்கு மிகுந்த கவலை ஏற்பட்டது. மருத்துவர்கள் உடனடியாக சிகிச்சை அளித்து, தையல் போட்டு, 28 வாரங்களுக்குப் பிறகு குழந்தையை அறுவை சிகிச்சை மூலம் எடுக்க வேண்டிய நிலை ஏற்படலாம் என்று தெரிவித்தனர். ஆனால் நான் ஜீவ மாதாவை முழுமையாக நம்பி, இக்கோயிலுக்கு வந்து, "39வது வாரம் வரை என் மகளுக்கும் குழந்தைக்கும் எந்தத் தீங்கும் நேரக்கூடாது இதற்கு நான் இங்கு சாட்சி சொல்வேன்" என்று வேண்டிக்கொண்டேன். ஜீவ மாதாவின் அருளால், 39வது வாரத்தில்தான் குழந்தை அறுவை சிகிச்சை மூலம் பிறந்தது. குழந்தையை எடுத்தபோது மருத்துவர்கள், "நாங்கள் போட்ட தையல் ஒரு இடத்திலும் திறக்கவில்லை எப்படி போட்டோமோ அதேபோல இருந்தது" என்று தெரிவித்தனர். இது எங்கள் குடும்பத்திற்கு ஜீவ மாதா அளித்த மிகப்பெரிய வரமாக நான் கருதுகிறேன். அதனால் ஆஸ்திரேலியாவிலிருந்து திரும்பியவுடன், ஜீவ மாதாவுக்கு நன்றி செலுத்தி இந்தச் சாட்சியைச் சொல்ல வந்துள்ளேன். இயேசுவுக்கே புகழ் ஜீவ மாதாவுக்கு நன்றி

பார்வையற்றோரின் புத்தகம் செபமாலை

"செபமாலை என்பது பார்வையற்றோரின் புத்தகம், அங்கு ஆத்துமாக்கள் உலகிலேயே மிகப்பெரிய அன்பின் காவியத்தைக் கண்டு அதை வாழ்ந்து காட்டுகின்றன. இது எளியோரின் புத்தகம், இது மற்ற மனிதர்களின் கல்வியை விட திருப்திகரமான மறைபொருட்களுக்கும் அறிவிற்கும் அவர்களை உட்படுத்துகிறது. இது முதியோரின் புத்தகம், அவர்களின் கண்கள் இவ்வுலகின் நிழலை மூடி, அடுத்த உலகின் நிஜத்தில் திறக்கின்றன. ஜெபமாலையின் வல்லமை விவரிக்க முடியாதது." Archbishop Fulton Sheen.

கவிதைப் பக்கம்

மீட்புப் பயணம் - 10



முனைவர். ஜோ. விண்ணரசன்.

கதை மாந்தர் மோசே

அழகாக குழந்தையாம் அதிசயக் குழந்தையாம்
நைல்நதித் தடத்தினிலே கோரைப்புல் கலத்தினிலே
லேவியின் வம்சமான தேகமே அம்சமான
மிதந்து படர்ந்து வந்த முத்தான குழந்தையாம்.

நீராடச் சென்றிருந்த பாரவோன் மன்னரின்
தேரான மாமகளின் கரம் வந்த குழந்தையாம்
தண்ணீரில் மிதந்துவந்த தயாளன் என்பதனால்
தகுதியாய் பெயரும்பூண்ட மோசேதான் அக்குழந்தையாம்

சொந்தத் தாயவளே வாடகைத் தாயாக
பந்தம் சொல்லாமலே பாலூட்டும் சீராக
பாரவோன் பிள்ளையொன்றாய் பண்பான குழந்தையாம்.
பாந்தமாய் வளர்க்கப்பெற்ற பண்பான குழந்தையாம்

இளமையாய் வளர்ந்ததுமே இனமதை அறிந்தவராம்
இனத்தவர் கொடுமைகளை இமைகளில் புரிந்தவராம்
இனத்தவன் ஒருவனுக்காய் எகித்தியனை மடித்தவராம்
எகித்தியன் கண்மறைக்கு மதியானுக்குக் குதித்தவராம்

மாமனின் ஆடுகளை மலையோரம் மேய்த்தவராம்
பேசும் வார்த்தைகளை திக்கிக்குழறி வாய்த்தவராம்
திக்குத் தெரியாமல் திங்களுமே தேயாமல்
பட்டும் படாமலே பகலிரவைக் கழித்தவராம்

ஓர் நாள் நன்பகலில் ஒரேபு மலையருகே
பச்சைமுற் செடியொன்று பற்றி எரிந்ததுவை
கண்டு அதிசயிக்க அண்டைச் சென்றபோது
நின்று முழங்கியந்த கடவுள்குரல் கேட்டவராம்

ஆடுகளை மேய்த்துவரும் கோலின் துணையோடு
பாடுகளைத் தாங்கிவரும் கோஅவரின் பிள்ளைகளை
மீட்டுக்கொண்டுவர மீளஅங்கே சென்றவராம்
மாட்டேன் என்றாலும் மீறாமால்ச் செய்தவராம்

அதிசயக் கோலோடும் ஆரோனின் துணையோடும்
அற்புதங்கள் வளமோடும் இஸ்ரயேலை மீட்டவராம்
பத்துக்கட்டளைகளும் பகுந்தநல் நெறிகளுமே
கற்றுக் கொடுத்துவிட்டு கடவுளிடம் சென்றவராம்.

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து

"சிறிய கொப்பளத்தால் நடக்க முடியாமல் தவித்த என் காலை, ஜீவ மாதாவிடம் வேண்டியபின் அறுவை சிகிச்சையின்றி குணமாகியது."

சாட்சி

மரியே வாழ்க் என் பெயர் ரெஜினா. நான் இந்தப் பங்கையே சேர்ந்தவர். கடந்த வருடம் மார்ச் மாதம் என் காலில் ஒரு சிறிய கொப்பளம் ஏற்பட்டது. நாளடைவில் அது மிகவும் பாதிக்கப்பட்டு, என்னால் சரியாக நடக்கக்கூட முடியாத நிலை ஏற்பட்டது. பல மருத்துவர்களைச் சந்தித்தும், இது சாதாரண பிரச்சனை இல்லை என்றும், நரம்பில் ரத்தம் உறைந்திருப்பதாகவும் தெரிவித்தனர். இறுதியில் செட்டிநாடு மருத்துவமனையில் பெரிய அறுவை சிகிச்சை செய்தால்தான் கால் சரியாகும் என்று கூறினார்கள். ஆனால் அந்த அளவுக்கு எங்களிடம் வசதி இல்லை. அதனால் "இயேசப்பா, என் காலை உன் பாதத்தில் ஒப்படைக்கிறேன் நீங்கள்தான் எனக்கு எல்லாம் செய்ய வேண்டும்" என்று முழு நம்பிக்கையுடன் வேண்டிக்கொண்டேன். ஜீவ மாதாவிடம் வந்து, "இந்தக் காலை நீங்கள் குணப்படுத்திவிட்டால், உங்களுக்கு சாட்சி சொல்வேன்" என்று வேண்டிக்கொண்டேன். மாதாவின் அருளால், கடந்த மே மாதம் எனக்கு பெரிய அறுவை சிகிச்சை எதுவும் இல்லாமலேயே முழுமையான நலம் கிடைத்தது. இன்று என் கால் நன்றாகி, மிகவும் சந்தோஷமாக இருக்கிறேன். மரியே வாழ்க்

செபமாலை பற்றி...

தீய ஆவிகளை வெல்லவும் விரட்டவும், பாவத்திலிருந்து நம்மைக் தற்காத்துக் கொள்ளவும் செபமாலை ஒரு சக்திவாய்ந்த ஆயுதமாகும்... நமது இதயங்களிலும், இல்லங்களிலும், நமது நாட்டிலும் அமைதியை விரும்பினால், ஒவ்வொரு மாலையிலும் ஒன்று கூடி செபமாலையைச் செபிப்போம். எத்தனையோ கவலைகளும் உழைப்புகளும் நமக்குச் சுமையாயிருந்தாலும், ஒரு நாள் கூட செபமாலை செபிக்காமல் கடந்து செல்ல அனுமதிக்காதீர்கள்."

..... திருத்தந்தை பதினொன்றாம் பயஸ்

ஞாயிறு திருவழிபாட்டுத் துணைவன்

அருட்பணி. கில்பர்ட்ராஜ் ம.ஊ.ச
புனித அந்தோனியார் ஆலயம் விளாங்காட்டூர்



பொதுக்காலம் 28ம் ஞாயிறு
11 - 10 - 2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகோதரிகளே, கிறிஸ்தவ வாழ்க்கை என்பது மகிழ்ச்சியின் வாழ்க்கை. கொண்டாட்டத்தின் வாழ்க்கை. நம்முடைய மகிழ்ச்சியையும், கொண்டாட்டத்தையும் வெளிப்படுத்த நம் உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் நாம் விருந்து படைக்கின்றோம். விருந்து என்பது நம் அன்பைப் பலப்படுத்தும், உறவை வலுப்படுத்தும். ஆண்டின் பொதுக்காலத்தின் இருபத்தெட்டாம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று கடவுள் நம் அனைவருக்காகவும் பெரிய விருந்து ஒன்றை ஏற்பாடு செய்துவிட்டு அவ்விருந்துக்கு வரும்படி நம் அனைவருக்கும் அழைப்பு விடுக்கின்றார். கடவுள் நம்மோடு நட்பு பாராட்டவும், நம்மோடு தந்தை பிள்ளைக்கு உண்டான உறவை உருவாக்கிக்கொள்ளவும் விருந்தை ஏற்பாடு செய்து நமக்கு அழைப்பு கொடுக்கின்றார். நற்செய்தியில் விருந்துக்கு அழைக்கப்பட்டவர்கள் பல சாக்குப்போக்குகளைச் சொல்லி விருந்தைப் புறக்கணித்தார்கள். ஒவ்வொரு நாளும் திருப்பலியில் நம் ஆண்டவர் இயேசு தன்னையே நற்கருணை வழியாக நமக்கு உணவாகப் படைக்கிறார். அந்த திருவிருந்தில் நாம் முழுமனதுடன் கலந்துகொள்கின்றோமா? அல்லது ஏதாவது சாக்குப்போக்குச் சொல்லி அவ்விருந்தைப் புறக்கணிக்கின்றோமா? சிந்தித்துத்துப் பார்த்தவர்களாக இத்திருப்பலியில் இணைவோம்.

முதல் வாசக முன்னுரை

நம் கடவுள் தம்முடைய மக்களின் குறைகளைக் கண்ணுற்றுப் பார்த்து அதை நீக்குபவராக இருக்கின்றார். மக்களின் துன்பங்களை அகற்றுகிறார். கண்ணீரைத் துடைக்கின்றார். கவலையைப் போக்குகின்றார். நல்லதொரு விருந்து படைத்து தம் மக்களின் பசியையும் போக்குகின்றார் என்று எடுத்துரைக்கும் இறைவாக்கினர் எசாயாவின் வார்த்தைக்கு கவனமுடன் செவிமடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

நம் கடவுள் நமக்கு வலுவூட்டுபவராகவும், மனதைரியத்தைக் கொடுப்பவராகவும் இருக்கிறார். அவருடைய துணையோடு நாம் எத்தகைய துன்பத்தையும் எதிர்கொள்ள முடியும். கடவுள் நம் அனைவருக்கும் தமது ஆற்றலைத் தருகின்றபோது நாம் எல்லாச் சூழ்நிலையிலும் மகிழ்ச்சியோடு வாழ்ந்து கடவுளை மாட்சிப்படுத்த வேண்டுமெ என வலியுறுத்தும் தூய பவுலடியாரின் வார்த்தைக்குச் செவிகொடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருள்பணியாளர்: நம் அனைவருடைய நல்வாழ்விற்காகவும் ஒவ்வொரு நாளும் நற்கருணையில் தம்மையே விருந்தாகப் படைக்கும் நம் அன்பு ஆண்டவர் இயேசுவின் பாதத்தில் நம்முடைய அனைத்து தேவைகளையும் எடுத்துவைத்து நம்மை நிறைவாக ஆசீர்வதிக்கும்படியாக மன்றாடுவோம்.

1. எல்லாம் வல்ல இறைவா, உம் திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்களுடைய அழைத்தலுக்கேற்ப வாழ்ந்து அவர்களிடம் ஒப்படைக்கப்பட்ட இறைமக்களை அன்பின் வழியில் நடத்தத் தேவையான அருள்வரத்தைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்

2. அன்பின் இறைவா, எமது பங்கிலும், குடும்பங்களிலும் இருக்கின்ற அனைத்து நோயாளிகளையும் உம் பாதத்தில் வைத்து மன்றாடுகின்றோம். அவர்கள் அனைவரையும் தொட்டு குணப்படுத்தி நல்ல உடல் ஆரோக்கியத்தைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. ஆற்றலின் ஊற்றே எம் இறைவா, தோல்விகளாலும், இழப்புக்களாலும் தடுமாறி மனஅமைதியை இழந்திருக்கும் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் உம்முடைய அருளினாலும், ஆற்றலினாலும் வலுப்பெற்று மனநிம்மதியோடு வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. வார்த்தையான எம் இறைவா, நாங்கள் அனைவரும் எங்கள் அன்றாட கிறிஸ்தவ வாழ்க்கையில் இறைவார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுத்து அவ்வார்த்தை காட்டுகின்ற வழியிலும், ஒளியிலும் எங்கள் வாழ்க்கையை அமைத்துக்கொள்ள தேவையான அருளைத்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. அமைதியின் இருப்பிடமான இறைவா, பல்வேறு நாடுகளுக்கிடையே நடைபெறும் போர்கள், கலவரங்கள் அனைத்தும் நிறுத்தப்பட்டு

பகைமை ஒழிந்து நாடுகள் அனைத்தும் தங்களுக்குள் நட்பு பாராட்டி வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அருள்பணியாளர்: எல்லாம் வல்ல இறைவா, நீர் எங்கள் மீது வைத்திருக்கின்ற அளப்பரிய அன்பிற்காக உமக்கு நன்றி செலுத்துகின்றோம். எங்களுக்காக உம்முடைய திருமகனின் உடலை உணவாக தருகின்றீர். அத்திருவிருந்தில் பங்கெடுக்கும் நாங்கள் அனைவரும் அவராகவே மாறவும், அவரைப்போல வாழவும் செய்தருள வேண்டுமென்று என்றென்றும் வாழ்ந்து ஆட்சி செய்கின்ற அவர் வழியாகவே உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 29ம் ஞாயிறு
18 - 10 -2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் பிரியமான சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலத்தின் 29ம் ஞாயிற்றுக்கிழமையாகிய இன்று நாம் வாசிக்கின்ற இறைவார்த்தையானது நாம் அனைவரும் நம்மைப் படைத்த உண்மையான, உயிருள்ள கடவுளை மட்டுமே நம்முடைய இறைவனாக ஏற்றுக்கொண்டு அவருக்கு பணிவிடை செய்து வாழ அழைப்புக் கொடுக்கின்றது. நம்முடைய பத்துக்கட்டளைகளில் முதல் கட்டளை கூறுவதுபோல நமக்கு இறைவன் ஒருவரே. அவரே நம்மைப் படைத்தார், மீட்டார், பராமரிக்கின்றார், பாதுகாத்து வழிநடத்துகின்றார். அவரைத் தவிர நமக்கு வேறு கடவுள் கிடையாது. பல நேரங்களில் நாம் அந்தக் கடவுளை மறந்துவிட்டு உலகம் சார்ந்தவற்றிற்கு நம்மடைய வாழ்க்கையில் அதிக முக்கியத்துவம் கொடுக்கிறோம். பணத்திற்கும், செல்வத்திற்கும், அலைபேசிக்கும், தொலைத் தொடர்பு சாதனங்களுக்கும், சமூகவலைத ˙தளங்களுக்கும் அதிக முக்கியத்துவம் கொடுத்து அதற்காக அதிக நேரம் செலவழிக்கிறோம் என்றால் அவை அனைத்தும் நமக்கு கடவுளாக மாறுகின்றன. நாம் வேறு தெய்வங்களை வழிபடுகின்றவர்களாக மாறுகின்றோம். உலகம் சார்ந்தவற்றை ஒதுக்கிவிட்டு கடவுளுக்கு ஏற்ற செயல்களில் நாம் ஈடுபட்டு ஒரே கடவுளின் உண்மை மக்களாக வாழ வரம் வேண்டி இத்திருப்பலியில் இணைவோம் பக்தியோடு.

முதல் வாசக முன்னுரை

கதிரவன் உதிக்கும் திசை தொடங்கி மறையும் திசை வரை யாவே கடவுளைத் தவிர வேறு தெய்வங்கள் இல்லை. நாம் அக்கடவுளை அறியாதிருந்தாலும் அவர் நம் ஒவ்வொருவரையும் அறிந்து வைத்திருக்கின்றார். நம் அனைவருக்கும் என்ன தேவை என்றும் தெரிந்து வைத்திருக்கின்றார்

என்று எடுத்துச் சொல்லி அவரை மட்டுமே உண்மைக் கடவுளாக ஏற்று வாழ அழைப்புக் கொடுக்கும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

நாம் அனைவரும் கடவுளால் தேர்ந்துகொள்ளப்பட்டவர்கள். எனவே, நாம் அன்பிலும், இறைநம்பிக்கையிலும் மற்றவர்களுக்கு முன்மாதிரியாகவும், சிறந்த வழிகாட்டியாகவும் வாழ வேண்டும் என்று வலியுறுத்தும் தூய பவுலடியாரின் வார்த்தைக்கு செவிகொடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருள்பணியாளர்: *அன்பார்ந்தவர்களே, நம்முடைய தேவைகள் அனைத்தையும் அறிந்துள்ள இறைவனிடம் நம்பிக்கையோடு நம்முடைய மன்றாட்டுக்கள் அனைத்தையும் எடுத்துரைப்போம்*

1. *அன்பின் இறைவா, எம் தாய்த் திருஅவையை வழிநடத்தும் எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள், துறவறத்தார் அனைவரும் தங்களிடம் ஒப்படைக்கப்பட்ட மக்களை உண்மையான, ஒரே கடவுளாகிய உம்மை நோக்கி வழிநடத்த தேவையான அருளையும், ஆற்றலையும் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

2. *எல்லாம் வல்ல இறைவா, உம்மால் படைக்கப்பட்ட மக்களாகிய நாங்கள் அனைவரும் எங்கள் வாழ்வில் உலகம் சார்ந்த செயல்களுக்கு அதிக முக்கியத்துவம் கொடுக்காமல் ஒரே கடவுளாகிய உம்மை மட்டுமே மையமாகக் கொண்டு வாழ வரம்தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை ம்னறாடுகின்றோம்.*

3. *அருளின் ஊற்றே எம் இறைவா, உம்மீது நம்பிக்கை இல்லாதவர்களுக்காகவும், இறைநம்பிக்கையில்தளர்ச்சியடைந்தவர் களுக்காகவும் உம்மை வேண்டுகின்றோம். அவர்கள் அனைவரும் உம்மை இறைவனாக ஏற்று, உம்மீது ஆழ்ந்த நம்பிக்கை கொண்டு வாழ அருள் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

4. *நல் வழிகாட்டியே எம் இறைவா, எம் குடும்பங்களிலும், பங்கிலும் உள்ள இளைஞர்,இளம்பெண்களை ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் உலகம் சார்ந்தவற்றில் தங்களது கவனத்தைச் செலுத்தாமல், ஆன்மீக வாழ்வில் வளர்ச்சியடைய தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

5. தூய தந்தையாகிய இறைவா, உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட நாங்கள் அனைவரும் எங்கள் கிறிஸ்தவ அழைத்தலுக்கேற்ப அன்பு, பொறுமை, கனிவு, இரக்கம் நிறைந்த வாழ்க்கை வாழ அருள்தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அருள்பணியாளர்: அன்பே உருவான இறைவா, நாங்கள் உம்மீது கொண்டுள்ள நம்பிக்கையினால் தூண்டப்பட்டு உம்முடைய பாதத்தில் எடுத்துவைத்து வேண்டியுள்ள அனைத்து தேவைகளையும் நிறைவேற்றி எங்களை ஆசீர்வதிக்க வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

பொதுக்காலம் 30ம் ஞாயிறு
25 - 10 -2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்புமிக்க சகோதர சகோதரிகளே, ஆண்டின் பொதுக்காலத்தின் 30ம் ஞாயிற்றுக்கிழமையக் கொண்டாடக் கூடியிருக்கும் நம் அனைவரையும் இன்றைய இறைவார்த்தையானது அன்பு செய்து வாழ அழைப்புக்கொடுக்கின்றது. இந்த உலகத்தில் வாழும் அனைத்து உயிர்களும் அன்புக்காக ஏங்குகின்றன. அதிலும் குறிப்பாக, மனிதன் தம் சக மனிதனின் அன்புக்காக தாகம் கொள்கிறான். அன்பு என்ற ஒரு பண்பு நம் வாழ்வில் இருக்கின்றபோது நம் சமூகத்தில் தவறுகள் குறைந்துவிடும். மனித வாழ்க்கை சகோதர அன்பு, இறை அன்பு என்ற இரண்டையும் மையமாக வைத்து கட்டி எழுப்பப்பட்டால் எந்த ஒரு தீமையும் யாருக்கும் நிகழாது. நாம் அனைவரும் ஒற்றுமையோடும், மகிழ்ச்சியோடும், அமைதியோடும் வாழ முடியும். இத்தத்தான் இன்றைய இறைவார்த்தை நமக்கு எடுத்துச் சொல்லி நாம் அனைவரும் நம் சகோதர, சகோதரிகளை அன்பு செய்து வாழவும், எல்லாவற்றுக்கும் மேலாக கடவுளை அன்பு செய்து வாழவும் நமக்கு அழைப்புக் கொடுக்கின்றது. இந்த அழைப்பை ஏற்றுக்கொண்டு பிறரன்புக் கட்டளையையும், இறையன்புக் கட்டளையையும் நாம் வாழ்வாக்க அருள் வேண்டி இத்திருப்பலியில் பக்தியோடு மன்றாடுவோம்.

முதல் வாசக முன்னுரை

ஏழை எளியவர்களுக்கும், அன்னியர்களுக்கும், விதவைகளுக்கும் நாம் நம்மால் இயன்ற உதவியைச் செய்ய வேண்டும். அவர்களுக்கு ஒருபோதும் எந்த தீங்கும் விளைவித்து அவர்களைத் துன்புறுத்தக் கூடாது என வலியுறுத்தும் இம்முதல் வாசகத்திற்கு செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

தூய ஆவி அருளுகின்ற வல்லமையோடு நாம் அனைவரும் நம்முடைய துன்ப நேரங்களிலும் உறுதியான நம்பிக்கையோடு வாழவேண்டும் என்றும், அதே தூய ஆவி அருளும் மகிழ்வோடு இறைவார்த்தையை ஏற்றுக்கொண்டு வாழ்ந்து மற்றவர்கள் முன் இறைசாட்சியாகத் திகழ வேண்டுமென்றும் அழைக்கும் தூய பவுலடியாரின் வார்த்தைக்கு செவிகொடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருள்பணியாளர்: பிறரன்பு, இறையன்பு கட்டளைகளை அடித்தளமாகக் கொண்டு வாழ நமக்கு அழைப்பு விடுக்ககும் நம் தூய தந்தையாகிய இறைவனிடம் நம் வேண்டுதல்கள், மன்றாட்டுக்கள் அனைத்தையும் பக்தியோடு எடுத்துவைப்போம்.

1. அன்பின் ஊற்றே எம் இறைவா, உம்முடைய திருஅவையை வழிநடத்த உம்மால் தேர்ந்துகொள்ளப்பட்ட எம் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் எல்லாருக்கும், எல்லாவற்றுக்கும் மேலாக உம்மையே அன்பு செய்து உம் திருப்பணியைத் திறம்படச் செய்யத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. இரக்கத்தின் ஊற்றே எம் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் எங்களோடு வாழுகின்ற சகோதர சகோதரிகளை அன்பு செய்து வாழவும், ஒருவர் மற்றவருடைய குற்றங்களை மன்னித்து ஒற்றுமையோடு வாழவும் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. எங்கள் அன்புத்தந்தையே இறைவா, உம்முடைய மக்களாகிய நாங்கள் அனைவரும் இவ்வுலக செல்வங்களையும், பெருமைகளையும் அன்பு செய்வதை நிறுத்திவிட்டு நிலையான கடவுளாகிய உம்மை மட்டுமே முழு இதயத்தோடு அன்பு செய்து எந்நாளும் உம்முடைய அன்பு மக்களாக வாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. ஒற்றுமையை உருவாக்குபவரே எம் இறைவா, பல்வேறு மனக் கசப்புகளினால் ஒற்றுமையை இழந்து பிரிந்து வாழுகின்ற அனைவரையும் ஆசீர்வதிக்க வேண்டுகின்றோம். உம்முடைய அருளினால் அவர்கள் ஒருவர் மற்றவரை உண்மையான விதத்தில் அன்பு செய்து ஒற்றுமையோடும், மனமகிழ்வோடும் வாழ அருள்தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

5. ஏழைகளை அன்பு செய்யும் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் வறியோரையம், ஏழை எளியவர்களையும், தனிமையில்

வாடுவோரையம், யாருமில்லாதவர்களையும் அன்பு செய்து எங்களால் இயன்ற உதவிகளை அவர்களுக்கு செய்துவாழ அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

அருள்பணியாளர்: அன்பே உருவான இறைவா, நாங்கள் அனைவரும் ஆழ்ந்த நம்பிக்கையோடு உம்மிடம் எடுத்துவைத்து மன்றாடியுள்ள எல்லாத் தேவைகளுக்கும் கனிவாய் செவிசாய்த்து அவற்றை நிறைவேற்றி நாங்கள் எங்கள் அன்றாட வாழ்வில் பிறரன்பு, இறையன்புக் கட்டளைகளைப் பின்பற்றி வாழ அருள்தர வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.

அனைத்து புனிதர் பெருவிழா
1 - 11 -2026

திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் அன்பார்ந்த சகோதர சகேதரிகளே, இன்று நம் தாய்த்திருஅவையோடு இணைந்து நாம் அனைத்து புனிதர்களுடைய பெருவிழாவைக் கொண்டாட அழைக்கப்படுகின்றோம். நம்முடைய கத்தோலிக்கத் திருஅவையில் அன்னை மரியா, புனித யோசேப்பு, புனித திருமுழுக்கு யோவான் ஆகியோருக்கு அடுத்த நிலையில் திருத்தூதர்கள், மறைசாட்சியர், மறைவல்வுநர்கள், அருட்பணியாளர்கள், அருட்கன்னியர்கள் என்று பல நிலைகளில் பல ஆயிரக்கணக்கான புனிதர்கள் இருக்கிறார்கள். இப்புனிதர்கள் அனைவரையும் ஒரே நாளில் நினைவுகூர்ந்து, அவர்களுக்கு விழாக்கொண்டாடி, அவர்களிடமிருந்த நல்ல பண்புகளை நாமும் கடைபிடித்து வாழ திருஅவை இன்று நமக்கு அழைப்புவிடுக்கின்றது. புனிதர்கள் அனைவருமே நம்மைப்போல் சாதாரண குடும்பங்களில் பிறந்தவர்கள், வளர்ந்தவர்கள், வாழ்ந்தவர்கள். மனிதபலவீனத்தோடு இருந்தாலும் ஒருகட்டத்தில் இறை அழைத்தலை உணர்ந்து மனம் மாறியவர்கள். யாருக்கும் எந்த தீமையும், கெடுதலும் செய்யாமல் இறைநம்பிக்கையோடு வாழ்ந்த நல்ல மனிதர்கள்தான் இவர்கள். வேதகலாபனையின்போதும், வாழ்வில் துன்பம் சூழ்ந்த நேரங்களிலும் பெற்றுக்கொண்ட இறைநம்பிக்கையில் உறுதியோடு இருந்தவர்கள். இறைமகன் இயேசுவின் மதிப்பீடுகளுக்காக வாழ்ந்து இறுதி மூச்சு வரை இறைநம்பிக்கையாளர்களாகவும், மனிதநேயமிக்க மனிதர்களாகவும் வாழ்ந்தவர்கள் நம் புனிதர்கள். அவர்களுடைய பெருவிழாவில் நாமும் அவர்களைப்போல் சிறந்த மனிதர்களாகவும், நல்ல நம்பிக்கையாளர்களாகவும் வாழ அருள் வேண்டி இணைவோம் இத்தியாகத் திருப்பலியில்.

முதல் வாசக முன்னுரை

ஒருசில நூற்றுக்கணக்கானவர்கள் மட்டும் நம்முடைய திருஅவையால்

புனித நிலைக்கு உயர்த்தப்பட்டிருந்தாலும், இவ்வுலகில் நல்ல மனிதர்களாக வாழ்ந்து மரித்த எண்ணிலடங்காத பெருந்திரளான மக்கள் விண்ணுலகில் இறைதிருமுன்னிலையில் புனிதர்களாக உயர்த்தப்பட்டு கடவுளுடைய அரியணையைச் சுற்றி நின்று கடவுளைப் போற்றுகின்றார்கள் என்று எடுத்துச் சொல்லி நாமும் அந்த புனிதர் திருக்கூட்டத்தில் ஒருநாள் இணைய வேண்டும் என்ற அழைப்பைத் தரும் திருவெளிப்பாடு புத்தகத்திற்கு கவனமுடன் செவிகொடுப்போம்.

இரண்டாம் வாசக முன்னுரை

நாம் அனைவருமே கடவுளுடைய மக்கள். கடவுள் நம்மை அறிந்துள்ளதுபோல நாமும் அவரை அறிந்துகொள்ள வேண்டும். கடவுள் தூயவராக இருப்பதுபோல நாமும் தூயவராக வாழவேண்டும். இவ்வுலகத்தில் வாழும்வரை நாம் கடவுளுடைய மக்களாக எல்லாரையும் அன்புசெய்து மனிதநேயத்தோடும், தூய்மையோடும் வாழுகின்றபோது, இவ்வுலக வாழ்விற்குப் பின்பாக நாமும் கடவுளின் மாட்சியில் பங்கெடுப்போம் என்ற செய்தியைத் தரும் தூய யோவானின் வார்த்தைக்குக் கவனமுடன் செவிமடுப்போம்.

நம்பிக்கையாளரின் மன்றாட்டுக்கள்

அருள்பணியாளர்: அனைத்துப் புனிதர்களின் பரிந்துரையின் வழியாக நம்முடைய அன்பு இறைவன் நம்மையும் நமது குடும்பங்களையும் நிறைவாக ஆசீர்வதிக்கும்படியாகவும், நாம் அனைவரும் இவ்வுலகில் நல்ல மனிதர்களாக வாழவும் செய்தருளவேண்டி நம் மன்றாட்டுக்களை அவருடைய பாதத்தில் எடுத்துவைத்து மன்றாடுவோம்.

1. தூயவரான எம் இறைவா, நீர் உருவாக்கிய புனித திருஅவையை வழிநடத்தும் திருத்தந்தை, ஆயர்கள், குருக்கள் மற்றும் துறவறத்தார் அனைவரும் தங்களுயைட அழைத்தலுக்கேற்ப தூய உள்ளத்துடன் வாழ்ந்து உம்முடைய மகிமையின் பங்கேற்பாளர்களாகத் திகழவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

2. புனிதத்தின் ஊற்றே எம் இறைவா, உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் அனைவரும் உம்முடைய கட்டளைகளுக்குக் கீழ்ப்படிந்து, இறைமதிப்பீடுகளின்படி தூய இதயத்துடன் வாழவும் அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

3. எல்லாம் வல்ல இறைவா, உம்மால் படைக்கபட்ட நாங்கள் அனைவரும் உம் திருமகன் இயேசு கிறிஸ்துவின் போதனையின்படி நல்ல மனிதர்களாக வாழ்ந்து உம்முடைய புனிதர்களின் தோழமையில் இடம்பெற அருள்தர வேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.

4. *அன்பின் இறைவா, எம் குடும்பங்களில் இருக்கின்ற குழந்தைகள், சிறுவர், சிறுமியர் அனைவரையும் ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் அனைத்து புனிதர்களின் வாழ்வைப் பின்பற்றி இறைஞானத்திலும், மனிதயேத்திலும் வளரத் தேவையான அருளைத் தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

5. *அருள்வழங்கும் இறைவா, எம் நாட்டுத்தலைவர்களையும், இவ்வுலகத்தலைவர்களையும் ஆசீர்வதியும். அவர்கள் அனைவரும் தங்களுடைய பொறுப்புக்களையும், கடமைகளையும் சரிவர நிறைவேற்றவும், சுயநலமின்றி பொதுநலநோக்கத்தோடு பணியாற்றவும் அருள்தரவேண்டுமென்று ஆண்டவரே உம்மை மன்றாடுகின்றோம்.*

அருள்பணியாளர்: *அன்பின் இறைவா, உம்முடைய புனிதர்களின் பெருவிழா மகிழ்வில் உம்முடைய அன்பு மக்களாகிய நாங்கள் உம்முடைய திருப்பாதத்தில் எடுத்து வைத்து மன்றாடியுள்ள எல்லாத் தேவைகளையும் கனிவாய் நிறைவேற்றி நாங்கள் அனைவரும் நல்ல மனிதர்களாக வாழ்ந்து மறுவுலக வாழ்வில் அனைத்து புனிதர்களின் தோழமையில் உம்முடைய மாட்சியில் பங்குகொள்ளச் செய்தருள வேண்டுமென்று எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகின்றோம்.*

ஜீவ மாதாவிடம் ஜீவன் வேண்டி



சாட்சியின் கருத்து

மேடவாக்கம் - சகாய மாதா சர்ச்

"13 ஆண்டுகளாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்த என் மகனுக்கு ஜீவ மாதா இரட்டைக் குழந்தைகளை அருளினார்."

சாட்சி

மரியே வாழ்க் நான் மேடவாக்கம் சகாயமாதா சர்ச்சிலிருந்து வருகிறேன். என் மகனுக்கு 13 ஆண்டுகளாக குழந்தைப் பாக்கியம் இல்லாமல் இருந்தது. கடந்த வருடம் ஜனவரி மாதம் ஜீவ மாதாவிடம் வந்து, "மாதாவே, இத்தனை ஆண்டுகளாக குழந்தை இல்லாமல் இருக்கிறான் கண்டிப்பாக ஒரு குழந்தையைத் தாருங்கள்" என்று மனதார வேண்டிக்கொண்டேன். அதன்பிறகு ஒவ்வொரு மாதமும் இங்கு வந்து மாதாவிடம் வேண்டி, மாதா கொடுக்கும் வலையை எடுத்துச் சென்று என் மருமகளிடம் கொடுத்துக்கொண்டிருந்தேன். அவர்கள் புதுக்கோட்டையில் வசித்து வருகின்றனர். மாதாவின் அருளால், நவம்பர் மாதம் என் மருமகள் கருவுற்றார். தற்போது ஜூலை 2ஆம் தேதி குழந்தைகள் பிறந்தனர். அதுவும் ஒரு பெண் குழந்தை உட்பட இரட்டைக் குழந்தைகளாகப் பிறந்தது. 13 ஆண்டுகளாக இருந்த எங்கள் குடும்பத்தின் ஏக்கத்தைப் போக்கி, இரட்டைக் குழந்தைகளை அருளிய ஜீவ மாதாவுக்கு நன்றி செலுத்துகிறேன். மாதாவுக்கே புகழ்

விவிலிய வினாடி வினா

சரியான விடைகளை எழுதியவர்கள்

அருட்சகோதரிகள்

ஆஸ்வல்ட் அலெக்ஸ்-வரதராஜன்பேட்டை, ரொமான்னா-தூத்துக்குடி, புஸ்பம்-சிந்தாமனி, அருள்சீலி- தூத்துக்குடி, ஏஞ்சல், லீமா-களியக்காவிளை, லில்லி இசபெல்லா மேரி-மதுரை நாகமலை புதுக்கோட்டை, ஜோஸ்பின் ஜெயராணி-தொட்டியம், மேரிமெளரிஸ்- மாதாகோட்டை, மேரி செசாரியா- மாதவரம், சென்னை, லில்லி புஸ்பம்- மாதாகோட்டை, அசுந்தா புவனேஸ்வரி -தூத்துக்குடி, லோராமேரி-தூத்துக்குடி, லீமா-களியக்காவிளை, செர்வைட் கான்வென்ட் தோகமலை, சிரோன்- இடிந்தகரை, புஸ்பம் சிந்தாமனி, ஜூலி எலிசபெத்-மாதாகோட்டை, ரொமானா-தூத்துக்குடி, ஜோஸ்பிட்டாமேரி-திருச்சி, ஜெயமணி-மதுரை, ஜோசிஜெயராணி-திருச்சி, பிரேமா-திண்டுக்கல், ஜெரி மேரி- தூத்துக்குடி, ரூபல்லாமேரி- தூத்துக்குடி, ரஞ்சிதம்- மதுரை, புஸ்பாமேரி-மதுரை, பிரேமா - சங்கர்நகர், ஏஞ்சல் - கன்னியாகுமரி, ஜெயசேகரி-தாம்பரம், வில்சன் மேரி-திருச்சி, ஜான்சிமேரி- மதுரை, ரூபிமேரி- தோகமலை, புஷ்பாமேரி- சிவகங்கை, சகாயம்-ராம்நாட், ஜான்சிமேரி- மதுரை, ஜெரின்மேரி- திண்டுக்கல், ரூபி-தூத்துக்குடி,

பொதுநிலையினர்

தேவதாஸ்-பாண்டிச்சேரி, மரியபிரகாசம்-தர்மபுரி, ஹெர்மன்- தூத்துக்குடி, பாத்திமா-எடமலைப்பட்டி திருச்சி, ஆன்டனிக்கா செல்லி-சென்னை, இருதய விஜீலா-திண்டுக்கல், அற்புத சீலி-திண்டுக்கல், செலின் மேரி- திருச்சி-21, மேரி மார்க்ரட்- திருச்சி 21, ஆனிபீட்டர்ராஜ்- திருச்சி 21, மாசில்லா-தூத்துக்குடி, புஷ்பகண்ணு-கோயம்புத்தூர், சோசப் தக்கர்-திருச்சி 21, ஆன்டனி செரின் -சென்னை, அனிரூத் ஜெய்டன்-திருச்சி, பாத்திமா-திருச்சி-21, பிரான்ஸிஸ்பேசில்-திருச்சி, லீமாதெரஸ்-திருச்சி, அமல செல்வி-திண்டுக்கல், லீலாவதி-திண்டுக்கல், சிப்ரியன்-தெளி, மிக்கேல்சாமி-கோவை, ஜோஸ்பின்மேரி-திண்டுக்கல், டைமி-சென்னை, இம்மாகுலேட் சோபியா- திருச்சி, அமல செல்வி- திண்டுக்கல், கிளாரா லூர்துமேரி - திருச்சி, தென்னரசு-தூத்துக்குடி,

குழுக்கல் முறையில் பரிசு பெறுபவர்கள்

திருமதி பாத்திமா-எடமலைப்பட்டி திருச்சி ,

அருட்சகோதரி. அசுந்தா புவனேஸ்வரி -தூத்துக்குடி

Owned and Published by **THE ORDER OF SERVANTS OF MARY** from Jyothi Matha Alayam. 5/301 Matha Koil Street, Rajiv Gandhi Road, Okkiampet, Chennai – 600 097. and Printed by **M. RAJA REGAN** at **Devan Press**, Old No.138/1, New No.158/1, Venkatachala Mudali Street, Royapettah, Chennai – 600 014. Editor: **Fr. SAMYDURAI OSM.**

நீ என்னை மகிமை செய்ய செய்ய
நான் உன்னை மென்மேலும் ஆசிர்வதிப்பேன்

குழந்தை இயேசுவே
எங்கள்மேல் இரக்கமாயிரும்

குழந்தை இயேசு ஆலயம்

பரமேஸ்வரன் நகர், சோழிங்கநல்லூர், சென்னை 600119

INFANT JESUS
HAVE MERCY ON US

INFANT JESUS CHURCH

Parameswaran Nagar, Sholinganallur, Chennai 600119

Parish Priest - Rev.Fr.Antony Samy,OSM | **Parishioner**

Website: www.infantjesussholinganallur.org Ph: +919600393380



Jeevamadha Annual Feast
1st Saturday of December

Parish Annual Feast 2nd
Sunday of February

தீவமாதா திருவிழா
டிசம்பர் முதல் சனிக்கிழமை

பங்குத்திருவிழா பிப்ரவரி
இரண்டாம் ஞாயிறு

திருப்பலி நேரம்

திங்கள் - சனி காலை 6.30 மணி (தமிழ்)

ஞாயிற்றுக்கிழமை
காலை 7.00 மணி & 8.30 மணி (தமிழ்)
காலை 10.30 மணி & மாலை 5.00 மணி (ஆங்கிலம்)

மாதத்தின் முதல் சனி ஜீவமாதா தவநாள் ஆராதனை, திருப்பலி காலை 10.30 மணிக்கு நடைபெறும்

Mass Timings

Mon - Sat 6.30 PM (Tamil)

Sunday
7.00 AM & 8.30 AM (Tamil)
10.30 AM & 5.00 PM (English)
First Saturday of Every Month Jeevamadha Novena, Adoration and Mass at 10.30AM